பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
14 OCT 2009

விலை ரூபா 15.00
REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

11-10-2009
PAATHUKAVALAN
மலர்: 133 இதழ்: 19 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021- 222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# "துன்பப்படுபவர்கள், விலக்கப்பட்டவர்கள் மத்தியில் சேவை செய்ய உங்களை முழுமையாக அர்ப்பணியுங்கள்"

## உலக மறைபரப்பு ஞாயிறு (18.10.2009) தினத்தையொட்டி திருத்தந்தை வழங்கிய செய்தி

**"மக்களினத்தார் அதன் ஒளியில் நடப்பர்"
(திருவெளிப்பாடு 21.:.24)**

உலக மறைபரப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஞாயிறு தினத்திலே, கிறிஸ்துவின் மறைபரப்புக் கட்டளையாகிய "நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்" (மத்தேயு 28:19) என்பதை உங்கள் ஆழமான தேடலாகக் கொண்டு மக்களினத்தாரின் திருத்தூதராகிய தூய பவுலின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செயற்படும் என் சகோதர கருதினால், அருட்பணியாளர்களாகிய உங்களுக்கும் உலகிலே வாழும் இறைமக்களாகிய சகோதர சகோதரிகளுக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

"மக்களினத்தார் அதன் ஒளியில் நடப்பர்" (திருவெளிப்பாடு 21.:.24). திருச்சபையின் மறைபரப்பு பணியின் நோக்கம் நற்செய்தியின் ஒளியில் இறைவனை நோக்கிய பயணத்தை மேற்கொள்ளும் மக்களினத்தார் அனைவரும் இறைவனை அறிந்து அவருக்காகவே அப்பணியை முழுமையடையச் செய்ய வேண்டும். எனவே அதற்காக நாம் எமது துன்பங்கள், ஏக்கங்களோடு செயற்பட்டு, மக்கள் அனைவரும் திருச்சபையில் பிரகாசமாக வெளிப்பட தெளிவுடன் கிறிஸ்துவின் ஒளியை நோக்கி நடக்க வழிகாட்டுவோம். அதற்காக நாம் அனைவரும் மனிதகுலம் என்ற ரீதியில் ஒரே குடும்பமாக ஒரே தந்தையின் வழிகாட்டலில் இணைய வேண்டும். இதற்காகத்தான் கிறிஸ்துவின் திருத்தூதர்கள் தமது பணி, வாழ்க்கைப் போராட்டங்கள், வேதனைகள், துன்பங்கள் மத்தியில் உலகெங்கும் பரந்து சென்று தமது வாழ்வை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தனர். எனவே மீண்டும் ஒருமுறை எனது முன்னோர்கள் கூறியது போன்று இம் மறைபரப்புப் பணியை ஆழமாக, அடிக்கடி நிகழ்கின்ற ஒன் றாக உறுதிப்படுத்திக்கொள்வோம். திருச்சபையின் பணி அதிகாரத்தை மேம்படுத்துவதோ அல்லது அதன் ஆளுகையை உறுதிப்படுத்துவதோ அல்ல மாறாக கிறிஸ்துவாகிய உலக மீட்பரை மக்கள் மத்தியில் அறிவிப்பது. இதற்காகதான் நான் உங்களிடம் கேட்கின்றேன். மனித குலத்திற்காக விசேடமாக துன்பப்படுபவர்கள், விலக்கப்பட்டவர்கள் மத்தியில் சேவை செய்ய உங்களை முழுமையாக அர்ப்பணியுங்கள். மனித குலத்திற்கு நற்செய்தியை அறிவிப்பதற்காக நாம் எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் கிறிஸ்தவ சமூகத்திற்கு சிறப்பாக ஒவ்வொரு மனிதனுக்கும் நாம் வழங்கும் சேவையாக கருத வேண்டும். "இது பெருமை வாய்ந்த அளவிட முடியாத முடிவுகளை அடைய வழிவகுத்திருக்கின்றது. ஆனால் இன்று அதன் உள்ளர்த்தத்தை, யதார்த்த தன்மையை இழந்து கொண்டிருக்கின்றோம்" (மீட்புப்பணி

(8ம் பக்கம் பார்க்க...)

# பணியாளர்களின் தன்னலமற்ற பணியினாலும் தியாகத்தினாலும் கிறிஸ்தவ மறையானது தழைத்தோங்கியது

**யாழ் மறைமாவட்ட மறைபரப்பு சபை இயக்குனர்அருட்பணி. அ.ப. அன்ரனிப்பிள்ளை**

"தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன் (யோவான் 20,21) என்று இயேசு தனது சீடர்களை நற்செய்தி பணிக்காக அனுப்பி வைத்தார். இயேசுவின் சீடர்கள் உலகின் பல திசைகளிலும் சென்று நற்செய்தியை பறைசாற்றினார்கள். ஆரம்பத்தில் நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் குழுமமாக வாழ்ந்தார்கள். "அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்." (தி.ப.2,42). ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையை அறிந்த மக்கள் அவர்களுடன் சேர்ந்தார்கள். சீடர்களின் தொகை அதிகரித்தது. ஏனெனில் அவர்களின் வாழ்க்கை முறை பிறருக்கு முன்னுதாரணமாக அமைந்தது.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக திருச்சபை தனது நற்செய்தி பணியை தொடர்ந்து ஆற்றிவருகின்றது. தூய ஆவியானவர் திருச்சபையில் இருந்து செயலாற்றி இப் பணியை வழிநடத்தி வருகின்றார். திருச்சபையின் வரலாற்றில் அது பல கலாபனைகள், இடர்கள், என்பவற்றை சந்தித்துள்ளது. இவற்றின் மத்தியில் ஆவியானவர் பணியாளர்களுக்கு வலுவூட்டுபவராக இருந்து செயற்பட்டுள்ளார். மறைப்பணியாளர்களின் தன்னலமற்ற பணியினாலும் தியாகத்தினாலும் கிறிஸ்தவ மறையானது உலகின் பல்வேறு பகுதிகளில் தழைத்தோங்கியது.

எமது நாட்டிலும் வெளிநாடுக



ளில் இருந்து வந்த மறைப்பணியாளர்களினால் கிறிஸ்தவ மறை கொண்டுவரப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் கத்தோலிக்க மறையானது துன்பத்திற்கு உள்ள

(8ம் பக்கம் பார்க்க...)

# கலைஞரை வாழ்த்துகிறோம்

# ஆளுநர் விருது பெறும் கலாபூஷணம் G.P. பேர்மினஸ்




யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறகோரி. பிலிப் பேர்மினஸ் அவர்கள் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்கும் போது 1956இல் 'ஒரு புகையிரத நிலையம்' என்ற நாடகத்தில் நடித்தார். அதனைத் தொடர்ந்து கல்லூரியில் இயேசுவின் திருப்பாடுகளில் முக்கியபாத்திரமேற்று நடித்து கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாடகத்துறையில் ஈடுபட்டுழைக்கின்றார். திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான இவர் திருமறைக்கலாமன்றம், நாடக அரங்ககல்லூரி போன்றவற்றில் பயிற்சி பெற்று பல்வேறு நாடகங்களிலும் நடித்தவர். பல நாடகங்களையும் நெறியாள்கை செய்தவர்.

திருமறைக் கலாமன்றத்தில் அன்பில் மலர்ந்த அமரகாவியம், களங்கம், பலிக்களம்..... போன்ற பல்வேறு திருப்பாடுகளின் காட்சிகளில் நடித்திருப்பதோடு அவற்றை நெறிப்படுத்தியும் வந்துள்ளார். முதல் வீடியோ திரைப்படமான பலிக்களத்திலும் நடித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி புதுக்குடியிருப்பு, அளம்பில், ஹப்புத்தளை, மன்னார், போன்ற இடங்களிலும் நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளார். அது மட்டுமின்றி பல்வேறு நவீன நாடகங்களையும் நெறிப்படுத்தியுள்ளார். சிங்கள நாடகக் கலைஞர்களுடன் திருமறைக்கலாமன்றம் இணைந்து மேற்கொண்ட 'அசோகா' 'தர்ஷனா', போன்ற வார்த்தைகளற்ற நாடகங்களின் உதவி நெறியாளராக பணியாற்றியும், ஆடை அமைப்பினை மேற்கொண்டும், நடித்தும் தென்னிலங்கையில் பலரது பாராட்டுக்களையும் பெற்றிருப்பவர்.

(8ம் பக்கம் பார்க்க...)

# தூய திரேசாள் ஆலய திருவிழாவும் பங்குமனை புகுவிழாவும்



சுண்டுக்குளி றக்கா வீதி தூய திரேசாள் ஆலயத்தில் 04.10.2009 அன்று யாழ் ஆயர் தலைமையில் தூய திரேசாள் பெருவிழாக் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர் தமது மறையுரையில் தூய திரேசாள் சிறிய சிறிய வழிகளில் இயேசுவைப் பிரியப்படுத்தினார். பிறரால் ஏற்படுத்தப்பட்ட மனக்கஷ்டங்களை இயேசுவுக்கான அன்புக்காணிக்கையாக ஒப்புவித்து, எமக்கு முன்னுதாரணமாக விளங்குகின்றார் என வலியுறுத்தினார்.

12.04.2009 உயிர்ப்பு ஞாயிறன்று சுண்டுக்குளிப் பங்குத்தந்தை அருட்பணி. S.J.Q. ஜெயறஞ்சன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆயரின் பங்களிப்பாலும் இப்பங்கின் உள்ளூர், வெளிநாடு வாழ் பங்கு மக்களின் பேராதரவிலும், நலன

(8ம் பக்கம் பார்க்க...)

# யூபிலி விழாவில் மகிழும் கிறிஸ்தவ பாட ஆசிரியை



கடந்த 25 ஆண்டுகளாக புனித பத்திரிசியார் கல்லூரியில் கிறிஸ்தவ பாடத்தை (Christianity) முதன்மைப் பாடமாக கற்பிக்கும் ஆசிரியராக பணியாற்றி இவ்வருடம் கல்லூரியில் தனது யூபிலி விழாவை நிறைவு செய்கிறார் திருமதி. ஜோண் அரியதாஸ் (மல்லிகா ரீச்சர்). இவரின் யூபிலி விழா சிறப்பு நிகழ்வுகள் 06.10.2009 அன்று புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

கிறிஸ்தவ பாட கற்பித்தலில் நல்ல அனுபவம் மிக்க மல்லிகா ஆசிரியை அவர்கள், பல மாணவர்கள் நற் பெறுபேறுகள் பெற வழிகாட்டி, சிறந்த மாணவர்களை உருவாக்கி கல்லூரிக்குப் பெருமை சேர்ததுள்ளார். அவரின் யூபிலி ஆண்டிலே காவலன் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது.

## பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

### மறைபரப்பு ஞாயிறு

# தீமையை வெல்ல

'தீமையானவற்றை அகற்ற அதை நன்மையால் நிறை' என்ற இலகு தத்துவம் மறைபரப்பு ஞாயிறு திருவழிபாட்டில் பின்பற்றப்படுகிறது.

அழுக்கான பாத்திரங்கள் நல்ல நீரினால் சுத்தமாகிறது. கெட்ட வாடை வீசும் இடத்தை நறுமண புகை நிறைத்து அழகுபடுத்துகிறது.

தீமையின் பல வடிவங்கள் இன்று உலகையே நிறைத்து நிற்கின்றன. ஆதியில் தோன்றிய பாம்பும் அதன் நச்சுக் கனிகளும் மனித சமூகத்தில் தமக்கென இடத்தை கெட்டியாகவே பிடித்து வைத்துள்ளன.

இந்த அகாலமான யதார்த்த சூழலே நற்செய்தி அறிவுப்புக்கான அவசர தேவையை உணர்த்தி நிற்கின்றது.

எங்கு பகைமையுள்ளதோ அங்கு அன்பை, எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பை, எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியை ஏற்றும் இந்த நற்செய்தி அறிவிப்பு ஊடாக மட்டுமே இன்றைய உலகத்தின் பாவ நிலைகளை கழுவ முடியும.

இவற்றை யார் செய்வது? குருக்களா? பொது நிலையினரா? மனிதரிடமிருந்து தெரிவு செய்யப்பட்டு, பாவங்களுக்கு கழுவாயாக, பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்துவதற்காக குருக்கள் தெரிந்தெடுக்கப்பட்டுகின்றனர். அந்த வகையில் மறை பரப்பு பணி குருக்களுடைய முதன்மைப் பணி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், உலகில் இருந்து கொண்டு உலகை தூய்மைப்படுத்தும் பணியே பொது நிலையினரின் அழைப்பு என்று 2ம் வத்திக்கான் சங்க ஏடு குறிப்பிடுகிறது, பொது நிலையினரின் நற்செய்தி அறிவிப்புக்கான அழைப்பினையே இது வலியுறுத்துகிறது.

திருச்சபையில் பல்வேறு திருப்பணிகள் உள்ளன. எனினும் அதன் பணி ஒன்றே. நற்செய்தி அறிவிப்பது. அந்த வகையில் அருள்பணியாளர் தமது வாழ்க்கைத் தெரிவிற்கேற்ப தமது தளத்தில் நின்று நற்செய்தி அறிவிப்பதும், பொது நிலையினர் தமது உலகியல் இருப்புக்களின் பின்னணியில் நற்செய்தி அறிவிக்கும் ஓர் அழைப்பும் உள்ளது.

அருள்பணியாளர்களை போல, நற்செய்தி அறிவிக்கவும், தூய்மைப்படுத்தவும் ஆகிய திருத்தூதுப் பணிகளை ஆற்ற பொது நிலையினருக்கு எண்ணில்லாத வாய்ப்புக்கள் உள்ளன. "மானிடர் உங்கள் நற்செயல்களை கண்டு உங்கள் விண்ணக தந்தையை போற்றும்படி உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க" (மத். 5:11) என ஆண்டவர் கூறுகிறார். பொது நிலையினரின் இத்தகைய சாட்சிய வாழ்க்கை முறை, பாவ உலகை மாற்றும் திறன் கொண்டது. மனங்களை கடவுள் வழி ஈர்க்கும் சக்தி கொண்டது.

உலகம் தீயது அல்ல. கடவுள் படைத்தபோது அதை நல்லதெனக் கண்டார். பின் தீமை உலகில் எப்படி நுழைந்தது? கடவுள் படைத்தாரா? இல்லை கடவுள் மனிதனை படைத்தார். சுதந்திரம் கொடுத்தார். அது மனிதனால் தவறாக பயன்படுத்தப்பட்ட போது தீமை உலகில் நுழைந்தது. அத்தகைய தீமையை அகற்றும் போராட்டமே நற்செய்தி அறிவிப்பு. நன்மையால் தீமையை வெல்லும் உத்தி என்பது இதுவே"

### "புலம்பெயர்வோரை வரவேற்காத ஒரு சமூகம் தன்னை ஒரு கிறிஸ்தவ சமூகம் என அழைத்துக் கொள்ள முடியாது" குவாத்தமாலா ஆயர்

புலம்பெயர்வோரை வரவேற்காத ஒரு சமூகம் தன்னை ஒரு கிறிஸ்தவ சமூகம் என அழைத்துக் கொள்ள முடியாது என்று குவாத்தமாலா ஆயர் பேரவையின் புலம் பெயர்வோருக்கான அருட்பணிக் குழுத் தலைவர் ஆயர் அல்வாரோ ரமாசினி இமேரி கூறினார்.

ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள், புலம்பெயர்வோர் எதிர்கொள்ளும் துன்பங்களை யும் வேதனைகளையும் கனவுகளையும் நம்பிக்கைகளையும் புரிந்து கொள்ளவில்லை என்று ஆயரின் செய்தி கவலை தெரிவிக்கிறது.

### "கேரளத்தில் கல்வி கற்றோர் அதிகமாக இருப்பதற்குக் காரணம் கிறிஸ்தவமே"

கேரளத்தில் கல்வி கற்றோர் அதிகமாக இருபபதற்குக் காரணம் கிறிஸ்தவமே என்கின்றார் இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் முந்நாள் தலைவரும் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியருமாகிய முனைவர் எம்.ஜி.எஸ் நாராயணன்.

கேரளத்தில் 8வது நூற்றாண்டிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபை மக்களுக்குக் கல்வி யறிவைத் தந்துள்ளதாகவும், கேரளத்தின் பின்தங்கிய மக்களுக்குக் கத்தோலிக்க சமயமே சமூக முன்னேற்றத்துக்கு வழிகாட்டியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எண்ணியதும் நடந்ததும்

ஒருமுறை மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் படித்துக் கொண்டிருந்தபோது, அவர் அணியும் செருப்பு ஒன்றை ஒருவன திருடிக்கொண்டு ஓடினான். உடனே மகாத்மா காந்தி, மற்றைய செருப்பை தன் கையிலெடுத்துக் கொண்டு அவனைத் துரத் திக் கொண்டு ஓடினார். அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், ஃபார் இந்த பெரிய மனிதர், அந்த செருப்பை திருடிய மனிதனை அடிப்பதற்காக செருப்பை கையில் கொண்டு ஒடுகிறார். பற்று யாரை தான் விட்டு வைத்தது; என்று சலித்துக் கொண்டார்கள்.

மகாத்மா காந்தியை கேட்ட பொழுது ஃஃதிருடியவன் இரண்டு செருப்பையும் திருடியிருந்தால் நான் அவனைத் துரத்தியிருக்க மாட்டேன். ஒரு செருப்பை திருடிக் கொண்டோடுகிறானே. அதை வைத்து அவன் என்ன செய்யப்போகிறான் என்று நினைத்து தான் மற்றையதையும் அவனிடம் கொடுப்பதற்காக அவனை துரத்தினேன்;; என்றாராம். எண்ணியது ஒன்று நடந்தது இன்னொன்று.

## வள(னா)ர் பப்பா பதில்கள்

*1. கேள்வி : அன்புள்ள வளனாரே, திருப்பட்டங்கள் எத்தனை வகைப்படும்?*

கார்த்திகா, உடுவில்.

பதில் : திருப்பட்டங்கள் மூன்று வகை. ஆயர் நிலைஇ குருத்துவ நிலைஇ2 திருத் தொண்டர் நிலை. இவை பணி செய்வதற்கான பட்டங்கள்.

*2. கேள்வி : வளனாரே, இக்காலத்தில் சமூதாயம் சீரழிந்து வருகிறது. ஆகவே வீதிகளில் தீயனவற்றை பார்க்காதே, தீயனவற்றை கேட்காதே, தீயனவற்றை பேசாதே என்று சுவரொட்டிகள் எழுதி ஒட்டலாமா?*

அருள்நாதன், கரவெட்டி

பதில் : உமது சமூகத்தின் மீதான கவலை பாராட்டுக்குரியது. இக்கால சமூதாயம் எதை !செய்யாதே; என்றுநு தடுக்கிறோமோ அதை தான் செய்யும் இயல்பு கொண்டது. எனவே உமது அணுகுமுறையில் சிறிய மாற்றம் செய்யும். நல்லவற்றை கேட்போம். நல்லவற்றை பார்ப்போம், நல்லவற்றை பேசுவோம் என்று எழுதும். அதை இளைய சமுதாயம் சாதகமாகவாவது பரிசீலிக்கும்.

*3. கேள்வி : அன்புள்ள வளனாரே, சொத்துக்கள் வைத்திருப்பது தவறா?*

ராஜநாதன், சில்லாலை.

பதில் : இல்லையப்பா. தவறு என்று சொன்னால் அதை பாதுகாவலன் நிர் வாகத்திற்கு என்ன எழுதவா போகிறீர், அது உமது தனி மனித சுதந்திரம். அதனால் தனக்கெனப் பொருத்தமான அளவு சொத்துக்களை சேகரிக்க முடியும். ஆனால், சமூகமாக நீர் படைக்கப்பட்ட காரணத்தால் உமது தேவைக்கு அதிகமான சொத் துக்கள், தேவையுள்ளவர்களுக்கே உரியவை, அதை நீர் அவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது இறைவனின் திருவுளம்.

*4. கேள்வி : அன்புடன் வளனாரே, ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசு இருந்தா்ல் வாங்கலாமா?*

சுகிர்தன், சாவகச்சேரி.

பதில் : அதுதான் பாட்டின் அடுத்த வரியே சொல்லுதே. "மம்மியை" மட்டும் வாங்க முடியாததெண்டு. அப்ப "டடியை" வாங்கலாமா? காசு வாங்கிறதே அவரிட்ட இருந்து தானே. அப்ப அண்ணன் தம்பியை வாங்க முடியுமா? இப்படியே போனால் இது ஆதாம் ஏவாளில் தான் முடியும் போல இருக்கு. இதை இப்படியே விடுவோமே.

*5. கேள்வி : வளனாரே, செபம் என்றால் என்ன?*

அருள்மேரி, ஊர்காவற்றுறை.

பதில் : செபமா அது என்ன?, என்ற பல கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பங்களின் கேள்வியை நீர் சற்று வித்தியாசமாக கேட்டிருக்கிறீர் சரி. செபம் என்பது இறைவ னுடனான உறவு. மனிதனையும் இறைவனையும் இணைக்கும் பாலம். ஒரு தொடர் பாடல் (Communication) பணம் செலுத்தாமல் உலகத்தில் பேசக்கூடிய ஒரே ஒரு கொம்மியுனிகேஷன், செபம்தான். ஒன்றாய் செபிக்கும் குடும்பம் ஒன்றாய் வாழும் என்பர். தனிச் செபம் குழுச்செபம் என இருவகை உண்டு. இவற்றுக்கு அப்பால் அன்பு வாழ்வும் ஒரு செபமே.

## கிறிஸ்துவை வாழ்வால் பறைசாற்றுவதே மறைபரப்புப் பணி

அருட் சகோ. றமேஸ் அ.ம.தி

கிறிஸ்தவ வாழ்வின் சான்றுதான் மறை பரப்புப் பணியின் வடிவம். மறைபரப்புப் பணி என்பது இயேசுவின் உயிர்ப்பின் பயன்பாடு உயிர்த்த கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட வல்லமையை செயல்படுத்தல் உயிர்ப்பில் அருளப்பட்ட தூய ஆவியின் செயலூக்கம் என விளக்கப்படுகிறது. அதாவது இறைமகன் கிறிஸ்து ஏன் இவ்வுலகில் பிறந்தார், மரித்தார், உயிர்த்தார் என்ற உண்மையை அறிவிப்பதாகும். திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் கூறுவது போல் மறைபரப்பு பணி என்பது முதலில் கிறிஸ்துவே ஆண்டவர் என்பதை நம் விசுவாசிகளுக்கு போதித்தலும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு இயேசு கொண்டு வந்த மீட்பு திட்டத்தை அறிக்கையிடலும் ஆகும். திருத்தூதர்களின் மறைபரப்பு பணி இயேசுவின் பணித் தெடர்ச்சியே ஆகும். அப்பணி இயேசுவின் உயிர்பினால் அதிகார பூர்வமானதாகவும், உலகளாவியதாகவும், நிரந்தரமானதாகவும், தூய ஆவியைப் பெற்று வல்லமை கொண்டதாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

மறைபரப்பின் நோக்கம் சீடர் சமூகத்தை உருவாக்குதல் ஆகும். இது உயிர்த்த கிறிஸ்துவின் தொடர் இருப்பை சுட்டி நிற்கிறது. மேலாக மறைபரப்புப் பணி தூய திரித்துவ தன்மையினையும் கொண்டுள்ளது. "தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" (மத் 28:19). எமது தாய்த் திருச்சபையின் படிப்பினையின் படி திருமுழுக்கு பெற்ற யாவரும் நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதர்களே. எனவே எல்லா கிறிஸ்தவர்களும் முழுமையான இதயத்தோடு இப்பணியில் ஈடுபடுவது அவசியமாகும். அவர்கள் ஆற்றும் நற்செய்திப் பணி இயேசுவின் பார்வையில் அமைந்த முழு விடுதலைக்கான பணியாக சாதி, மத, மொழி, இனம் என்னும் எல்லைகளைக் கடந்த உண்மையான மறைபரப்பு பணியாக அமைய வேண்டும். மறைபரப்பு பணி ஒன்றாயினும் அது பல வழிகளில் செயல்படுவது கண்கூடு. மறைபரப்புப் பணியின் முதல் வழி சான்று பகர்தல் ஆகும். அதாவது கிறிஸ்துவுக்கும், நற்செய்தி மதிப்பீடுகளுக்கும் சாட்சிகளாக வாழ்வதாகும். கடவுள் தம் அருளாலும், இரக்கத்தாலும் கிறிஸ்துவின் மீட்பின் கொடையை இலவசமாக எல்லோருக்கும் வழங்குகிறார் என்ற உண்மையை அறிக்கையிடுவது மறைபரப்புப் பணியின் அடிப்படையும் மையமும் ஆகும்.

மறைபரப்பாளர் என்பவர் இயேசுவின் இறப்பு உயிர்ப்பினால் கொண்டுவரப்பட்ட உலகளாவிய மாற்றத்திற்கு சான்று பகர்பவர் ஆவார். அவர்களது சொல்திறன் செயற்பாடுகளும் உலக முடிவின் அடையாளங்கள். "நற்செய்தி அறிவிக்கப்படவில்லை என்றால் ஐயோ எனக்கு கேடு" (கொரி 9:16) என்று நற்செய்தியை அறிவிக்கும் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தினார் புனித பவுல். அதற்கு காரணம் தாயின் வயிற்றில் இருந்தே இத்தகைய பணிக்குதான் அழைக்கப்பட்டதாக அவர் உணர்ந்தார். கிறிஸ்துவின் தூதனாக தன்னையே பார்த்தார் (1தெச 1:4). எனவே ஒவ்வொரு மறைபரப்பாளரும் புனித பவுல் மற்றும் அப்போஸ்தலர்களையும், புனிதர்களையும் முன்னுதாரணமாகக் கொண்டு இயேசுவை வாழ்ந்து இறையனுபவத்தை பறைசாற்றுபவராக இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. மறைபரப்பாளர் ஒவ்வொருவரும் தான் அனுப்பபட்டவர் என்ற உணர்வையும் மன நிலையையும் எப்போதும் கொண்டிருக்க

(7ம் பக்கம் பார்க்க...)

# கவிதைச் சரம்

## நீண்ட பெருமூச்சுக்கள்

இயலாமை
நீண்ட பெருமூச்சுக்களாய்
மருந்துத் துண்டின்மேல்

வயிற்றால் சக்தி
பழஞ்சீலையாய் வெளிறிய
குருத்துடல் பாயில்

அரியும் காற்றில்
அலையும் விளக்கின் ஒளி

வியாகுலமாதா முன்னே
வழியும் கண்ணீருடன்
வயிறு பசித்திருக்க

தூரக்கச இருட்டில்
கடலோடு ஒருவன்
கண்விழித்து மாய்கின்றான்

**பியோ**
**புனித யாகப்பர் ஆலயம்.**

## சமாதானம்

மனிதா எப்போது ஏற்படும் எமது
உள்ளங்களில் சமாதானம்?
எங்கள் கனவுகள் எல்லாம் சிறகை
விரிக்க தினம் ஏங்குகிறோம் தினம்
உனக்காக...

சமாதானம் இல்லாத வாழ்வு
வாழத்தக்கது அல்ல
சமாதானம் ஒரு எட்டாக்கனி எனத்
தெரிந்தும் தினம் உனக்காகக்
காத்திருக்கிறோம்...

அட்டுழியங்களும், அடக்குமுறைகளும்
அடிமையான வாழ்வும், முரண்பாடுகளும்
அகன்று போக
சமாதானமே நீ வரவேண்டும்
சமாதானமே உனைக்காண துடிக்கின்றேன்
உன் வரவைக் காண காத்திருக்கின்றேன்
இன்று...

**அன்ரனி ஜின்சி**
**1ம் குறுக்குத் தெரு, பாஷையூர்**

## சுடு [நா/கா] டு

செந்தமிழும் சிங்களமும்
சிங்கார இஸ்லாமும்
மங்காத பெருமையுடன்
அறம் காத்து வாழ்ந்த நாடு

பொல்லாத புல்லர்களின்
அல்லாத செயல்களினால்
சொல்லொன்னா சோகமதில்
அல்லாடி கிடக்கும் நாடு

மரணத்தின் மடியிலே
இரணத்தின் கொடுமையிலே
கரணமிட்டு கலக்கப்பட்டு
சொரணை கெட்டுப் போன நாடு

படித்த கொடுமையினால்
சித்தமது கலக்கி நின்று
மித்தமது தலை கேனி
செத்தவரை கணக்கு எடுக்கும் நாடு

**இ. டெசாந்**
**ஏழாலை கிழக்கு, ஏழாலை**

## "உனக்கே உனக்காக இறைவன் மட்டும்தான்"

என்னில் வாழும் ஒருத்திக்கு பணமே பிடிக்கவில்லை – ஏனென்றால்
அது நிலையில்லாததால்...
என்னில் வாழும் ஒருத்திக்கு நட்பே பிடிக்கவில்லை – ஏனென்றால்
நண்பர்களில் உண்மையில்லாததால்...
என்னில் ஒருத்திக்கு பாசமே பிடிக்கவில்லை – ஏனென்றால்
நான் பாசம் வைத்ததால்
ஆனால் என்னில் வாழும் இறைவனுக்கு
என்னைப் பிடித்தது – ஏனென்றால்
நான் அவரில் வாழ்வதால்....

மனிதா வாழ்ந்து பார்...
உன்னிடம் இருப்பதைக் கொடுத்து வாழ்ந்து பார்
உடனிருக்கும் அயலவரின் துன்பத்தை துடைத்து வாழ்ந்து பார்
அன்போடு சில வார்த்தை பேசி வாழ்ந்து பார்
அன்பாக உறவாடி வாழ்ந்து பார்

இன்பத்திலும் இறைவனோடு ஒன்றித்து வாழ்ந்து பார்
துன்பத்திலும் இறைவனை மறவாது வாழ்ந்து பார்
அன்றும் இன்றும் என்றும் உனக்காக
உனக்கே உனக்காக இறைவன் மட்டும் தான்
வாழ்ந்து தான் பாரேன் மனிதா...

**போ. இந்துமதி**
**பாஷையூர்.**

# நரகப் பேருந்து - செய்வினை சூனியம்

**– அருள்திரு. இராசேந்திரம் ஸ்ரலின் –**

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

4. இதில் ஈடுபடுவோரின் சிந்தனை பிறழ்வு நிலையடைகின்றது. நாசூக்காகப் பொய் சொல்லி அறியாமையிலும் குழப்பத்திலும் வைத்திருப்பதுதான் பேயின் தந்திர வழியாகும் என்பதை இதில் ஈடுபடுவோர் உணர்வதில்லை. இதனால் இவர்கள் உண்மைகளை அறியும் ஆற்றலை இழந்துவிடுகின்றனர். பேய் உண்மையான நீடித்த மகிழ்ச்சி தராத பாவச் செயல்களை மகிழ்ச்சி தரும் செயல்களாக நினைக்க வைககின்றது. பாவத்தைப் பாவமில்லை என்று நியாயப்படுத்தல் இவர்களுக்குள் நிகழச்செய்கின்றது. இறை அருளை நாடுதலைப் பின் போட வைக்கின்றது. மோட்சம் நரகம் இல்லை என்ற விதண்ட வாதம் இவர்களின் மனம் உற்பத்தி செய்கின்றது.

5. இவர்கள் இறைவனின் பணியாளர்களை அவர்களின் செயற்பாடுகளை எதிர்க்கின்றனர். அதாவது சாத்தானின் கையாட்களாக விளங்கி இறைவனைச் சேர்ந்தவர்களுக்குத் துன்பம் விளைவிப்பதிலேயே தீவிரமாக இருக்கின்றனர். சைப்பிரசைச் சேர்ந்த எலிமா என்ற மந்திரவாதி திருத்தூதர்களுக்கு எதிராகச் செயற்படுவதையும் அவனை அலகையின் மகனே என்று பவுல் அழைப்பதையும் அவன் அவரின் வார்த்தையால் பார்வைப் புலன் இழந்ததையும் திருத்தூதர் பணியில் காணலாம். அதாவது மந்திரத்தில் ஈடுபடுவோர் அலகையின் மக்கள், இருளின் மக்கள் (தி.ப 13:8-12).

6. சகோரர்கள் தம் இறை நம்பிக்கையில் தளர்ந்துபோவதற்கு இவர்கள் தூண்டு கோலாக அல்லது உதாரணங்களாக விளங்குவதால் அவர்களது வாழ்வும் பாழாகிப் போகக் காரணமாகின்றனர்.

தமது ஆன்மாவுக்கு ஏற்படக் கூடிய இத்தகைய பாரிய இழப்புகள்பற்றி கவனத்தில் எடுத்து இவர்கள் மனம் திரும்ப வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம்.

### இறைவன் பேயைவிட வல்லமை மிக்கவர்

பேயைக் கட்டிப்போடும் ஆற்றலை இறபாயேல் வானதூதர் கொண்டிருந்தார் (தோபி 8:3) பேயுடனான போரில் மிக்கேல் வானதூதர் துணையாக வருவார் என்று வேதாகமம் கூறியுள்ளது (தானி 10:13). அதாவது பேயின் தாக்குதலிலிருந்து மக்களைப் பாதுகாக்க இறைவன் தன் தூதர்களை நமக்குத் துணையாகக் கொடுத்துள்ளார். மிக்கேல் மந்திரச் செபத்தின் வல்லமையைக் கத்தோலிக்கர்கள் பலர் அறிந்திருக்கின்றமையால் தான் பேயின் தாக்குதல் அல்லது செயற்பாடு இருப்பதாக உணரும் போது இச்செபத்தைப் பக்தியோடு செபிக்கின்றனர்.

### இறைமகன் இயேசு பேயைவிட வல்லமை மிக்கவர்

இயேசு தீய சக்திகளை அழிக்க வந்தாரென நற்செய்தி நூல்கள், திருப்பணி நூல் தெளிவான சான்றுகளைக் காண்பிக்கின்றன (மாற் 1:24: தி.ப. 8:7, 9:11-17). இயேசு பேயின் சூழ்ச்சியை அறிந்து அதன் சோதனைகளை வெற்றிகொண்டு நமக்கு சிறந்த முன்னுதாரணமானார். சாத்தானைத் தெண்டனிட்டு வணங்க மறுத்தார். அது கூறிய பொய்களை அடையாளம் கண்டு ஏற்க மறுத்தார். மேலும் பேயின் பிடியில் சிக்கித் துன்புற்றோர்மீது இரக்கம் காட்டி அவர்களை விடுதலையாக்கினார். இவ்வாறு தானே பேயைவிட வல்லமை மிக்கவர் என்பதைத் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தினார். மேலும் பேயோட்டும் வல்லமையைத் தன் சீடருக்கு அளித்தார் (மாற் 7:7-13). இன்றும் பல குணமாக்கல் வழிபாடுகளில் இடம் பெறும் பல அனுபவங்கள் பேயை விட இயேசுவே வல்லவர் என்பதற்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றன.

### குணமாக்குபவர்கள் கவனத்திற்கு

இயேசு பேயின் பிடியில் சிக்கியோரைக் குணமாக்கியபோது யார் ஏவி விட்டார்கள், எவ்வாறு புகுந்தது என்று விளக்கமளிக்காததற்கு வலுவான காரணங்கள் இருந்திருக்க வேண்டும். இந்த அணுகுமுறையையே குணமாக்கலில் ஈடுபடுவோர் கடைப் பிடிக்க வேண்டும். ஒருவருக்கு ஏற்பட்ட பாதிப்பு பேயின் செயலால் ஏற்பட்டதா இல்லையா என்றோ அதை யார் ஏவினார் என்றோ ஆவியானவர் வெளிப்படுத்துவது அவர்களைக் குணமாக்கவும் அவர்களின் மனமாற்றத்துக்காகச் செபிப்பதற்காகவுமே என்றே கொள்ள வேண்டும். இது குணமாக்குபவரின் ஆற்றலால் வெளிப்படும் ஒன்று அல்ல. எனவே பேயின் செயற்பாட்டை அடையாளம் காணும் ஆவியின் ஆற்றல் கொண்ட எவரும் அதை யார் ஏவிவிட்டார்கள் என்பதை பாதிக்கப்பட்டவர்களுக்குச் சொல்வதைத் தவிர்ப்பதே நல்லது. ஏனெனில் இது பகைமையை வளர்க்கக் கூடியது. அந்த வகையில் இயேசுவின் திரு விருப்புக்கு மாறானது.

### குணம்பெறுபவர்கள் கவனத்திற்கு

தாம் பேயிலிருந்து குணமடைந்தவர்களும் சாட்சியம் பகர்வதற்காக அன்றி அதை வெளியில் சொல்லக்கூடாது. ஏனெனில் செய்வினை செய்தவர்கள் மீளவும் செய்ய முயலக்கூடும். மாறாக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு அவ்வாறு செய்தவர்கள் நலமான வாழ்வைப் பெறவேண்டும், மனம் மாற வேண்டும் என்று செபிக்க வேண்டும். யார் செய்திருக்கக்கூடும் என்று ஊகிப்பதும், கற்பனையாக ஒருவரை நினைத்துப் பகைமை பழிவாங்கலில் ஈடுபடுவதும் இறை விருப்பத்திற்கு எதிரானது. இவ்வாறு செய்வது எமக்கு எந்த வகையிலும் இறையருளையோ, நலமான வாழவையோ, நல்லுறவுகளையோ பெற்றுத் தரமாட்டாது.

### சககத்தோலிக்கர்கள் கவனத்திற்கு

1. உடல்,உளநலமின்மைகளை அனுபவிப்பவர்கள் பேயால்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய இதற்கென விசேட இறையருள் பெற்ற குருக்களிடமே அனுப்பவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்குத் தம் வெறும் ஊகங்களை உண்மையாகக் கூறுவதை நிறுத்த வேண்டும்.

2. சகோதரர்கள் இத்தகைய பாவத்தில் விழக்காரணமாயிருப்பதும் பாவம் என்பதை மறந்து விடக் கூடாது. எனவே அவர்களை மந்திரகாரரிடம் செல்லுமாறு பரிந்துரைப்பதும் பாவமாகும்.

3. இத்தகைய பாவச் செயல்களில் ஈடுபவோர் மனம் மாற ஆழமாகச் செபிக்க வேண்டும்.

4. இயலுமானபோது அவர்கள் இப்பாவங்களிலிருந்து விடுபட அறிவுரை கூறலாம்.

# காவலன் கண்மணிகள்

## விவிலியத்தை படியுங்கள் விஞ்ஞானியாகலாம்

அறுவை சிகிச்சை என்றால், இன்று சர்வ சாதாரணமாக பேசப்படும் காரியமாகிவிட்டது.

அன்றோ - மிகவும் கொடூரமான காரியம் அறுவை சிகிச்சை செய்கிறதாயிருந்தால், வாட்ட சாட்டமான தடியர்கள் நோயாளியின் கைகளையும், கால்களையும் இறுகப் பிடித்துக் கொள்வார்கள். வாயில் துணி வைத்து அமுக்கி விடுவார்கள்.

உடலில் அறுவை சிகிச்சை செய்யும் பொழுது, அந்த நோயாளி படும் அவஸ்தை விவரிக்கவே இயலாத கொடூரம் இதைக் கண்ணுற்று கலங்கிய டாக்டர் ஜேம்ஸ் பாட்தாம்ப்ஸன் இதற்கு மாற்று வழி ஏதாவது கண்டு பிடிக்க வேண்டும் என்று சிந்தித்தார்.

ஒரு நாள், மறைநூலைப் படித்த பொழுது, ஆண்டவர் ஆதாமுக்கு ஆழ்ந்த உறக்கம் வரவவைத்து, விலா எலும்பை எடுத்த நிகழ்வைப் படித்தார்.

1. ஆழ்ந்த உறக்கம் வரவைத்தல்
2. அந்த உறக்கத்தில், மனிதனுக்கு வலி இருக்காது

ஆகவே, செபித்தார், ஆண்டவர் ஞானத்தை வழங்கினார்.


1847 - ஆம் ஆண்டு நவம்பர் 4இல் குளோராபார்மைக் கண்டு பிடித்தார். வெற்றி கண்டார். தடியர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது.

**செல்வி. கு. பப்ரீஸ்ரா நிமோஜினி**
**சுண்டிக்குளி, தூய திருமுழுக்கு யோவான் ஆலயம்.**

## கிறிஸ்தவத்தில் "மூன்றின்" (3) பங்கு

- மூன்றாம் நாள் இயேசு உயிர் பெற்றார்
- மூன்று நாட்களில் ஆலயத்தைக் கட்டுவேன்
- மும்முறை மறுதலித்தல்
- மூன்று மணிக்கு இறந்தார்
- மும்முறை குப்பிற விழுந்தார்
- மூன்று ஆணிகளால் அறையப்பட்டார்
- திருக்குடும்பம் மூன்று பேர் (இயேசு, மரி, சூசை)
- மூன்று கடவுள் (பிதா, சுதன், பரிசுத்த ஆவி)
- இயேசுவின் அன்புச் சீடர் மூவர் (யாக்கோபு, பேதுரு, யோவான்)
- மூன்று பேருக்கு முன்னிலையில் விசாரிக்கப்பட்டார்
- மும்முறை சாத்தான் அவரை சோதித்தது
- இயேசுவின் இறை வேண்டல் மூன்று
- பேதுருவை மும்முறை அழைத்து திருச்சபையை பொறுப்புக் கொடுத்தல்
- ஒத்தமை நற்செய்தி மூன்று (மத்தேயு, மாற்கு, லூக்கா)
- ஜெஸ்தமனித் தோட்டத்தில் மும்முறை சென்று செபித்தார்.
- எரேமியாவின் புதிய சிந்தனை மூன்று
- யுத்திக்கு என்ற இளைஞன் மூன்றாவது மாடியில் இருந்து கீழே விழுந்து இறந்தான்
- இயேசு மூன்று ஆண்டுகள் பகிரங்க சீவியம் சீவித்தார்.
- யோவேல் நற்செய்தியின் அதிகாரம் மூன்று
- பவுலின் தூதுரைப் பயணம் மூன்று

**டொ. பிரசாத்**
**ஆனைக்கோட்டை.**



# குருக்கள் ஆண்டு
# ஜூன் 2009 - ஜூன்2010



## எம் கடன் பணி செய்வதே;

குருக்கள் ஆண்டு எனத் திருத் தந்தை அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட இவ்வாண்டில் குருத்துவம் பற்றிய சில கருத்துக்களை எழுத ஆரம்பிக்கும் பொழுது, இதற்குப் பொருத்தமான தலையங்கம் - 'எம் கடன் பணி செய்வதே' என்று எனக்குத் தோன்றியதனால் இத் தலையங்கம் என்னால் தெரிந்தெடுக்கப்பட்டது. எமது மண்ணில வாழ்ந்து தன்னலமற்ற தொண்டுகளை ஆற்றிய குருக்களையும் அவர்களின் பல்வேறு பங்களிப்புக்களுடன், இன்றைய கால கட்டத்திலும் பல சவால்கள், கஷ்டங்கள் ஆகியவற்றுக்கு முகம் கொடுத்துத் தம் கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றும் குருக்கள் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். சென்ற நூற்றாண்டின் 50, 60வது வருடங்களும் அதன் பின்னர் வந்த தசாப்தங்களும் பாரிய விஞ்ஞான முன்னேற்றத்தின் பலன்களை இம் மானிட சமூகத்திற்கு வழங்கியுள்ளது. எனினும் 1960 வது வருடங்களில் போக்குவரத்து மோட்டார் வாகனங்களின் பாவனையினால் இலகுவாக்கப்பட்ட பின்பும், எமது அருட் தந்தையர்களில் சிலர் துவிச்சக்கர வண்டிகளில் சென்று தம் பங்கின் பல்வேறு கிராமங்களில் கடமையாற்றினர். அங்குள்ள ஆலயங்களில் திருப்பலி நிறைவேற்றுவதுடன் அவர்களின் கடமை முடிந்தது என எண்ணாமல், சிறுவர்களுக்கு மறைக்கல்வி வகுப்புக்கள் நடத்தினர். அங்குள்ள மக்களிடையே பிரிவினை ஏற்பட்டுத் தகராறுகள் வந்தபொழுது அவற்றைத் தீர்த்து வைத்து ஒற்றுமையை ஏற்படுத்திய சம்பவங்களும் பல உண்டு. அன்றும் இன்றும் பல எதிர்ப்புகள், அவதூறான பேச்சுக்கள் என்பவற்றையும் சிலர் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. பிரிவினைச் சபைகளைச் சார்ந்தவர்களும் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்களைத் தம் பக்கம் ஈர்ப்பதற்காக எமது குருக்களையும் சமயச் சடங்குகளையும் கேவலப்படுத்துவதுமுண்டு. ஆனால் இவற்றையெல்லாம் சமாளித்து, தமது கிறிஸ்தவ நெறிகளைக் கடைப்பிடித்ததால் பிற மதத்தவரின் மதிப்பைப் பெற்ற குருக்கள் பலர் உண்டு.

சிலர் கல்வித் துறையில் ஈடுபட்டு எமது பிள்ளைகளுக்குக் கல்வியையும், சமய அறிவு, ஒழுக்கம், கீழ்ப்படிதல் ஆகிய நற்பண்புகயையும் கற்பித்தனர். குருக்களினால் ஆரம்பித்து நடத்தப்பட்ட கல்லூரிகளில், சிறந்த கல்விப் போதனையுடன், விளையாட்டுத்துறை, இயல், இசை, நாடகம், சாரணீயம் எனப் பலவற்றிலும் மாணவர்களை ஈடுபடச் செய்தனர். பிற மதத்தவர் பலர் குருக்களின் கல்விக் கூடங்களில் தமது பிள்ளைகளையும் அனுமதிப்பதற்குப் போட்டி போட்டனர்.

சில பின்தங்கிய பங்குகளில் கடமையாற்றிய பல குருக்கள் பற்றாக்குறைகளுடன் வாழ்ந்த போதும், தமது மக்களுக்கு ஆற்றவேண்டிய கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றியும், ஏழைகளுக்கு இயன்றளவு உதவிகள் புரிந்தும் வாழ்ந்திருக்கின்றனர். தமது குடும்பங்களைப் பிரிந்து, கிறிஸ்துவின் நற்செய்தியை மக்களுக்கு எடுத்துரைத்து, திருவருட்சாதனங்களை வழங்கித் தம் கடமைகளை நிறைவேற்றிய எம் குருக்கள் பலர் தமது வயோதிப காலத்தில் தனிமையையும் அனுபவித்திருக்கின்றனர்.

எமது மண்ணில் கடந்த பல வருடங்களாக நடைபெற்ற போரின் தாக்கங்களிற்கு முகங்கொடுத்த குருக்கள் பலருண்டு. குண்டு வீச்சுகள், எறிகணைத் தாக்குதல்கள் மத்தியிலும் தம் மக்களுடன் ஓடி ஒளிந்தும் பட்டினி கிடந்தும், தமது மக்களுக்காகச் சகல விதமான கஷ்ட துன்பங்களிலும் பங்குபற்றியதுடன் காயம் அடைந்தவர்கள், நோயாளர்களுக்கு சிறந்த தொண்டு புரிந்து, தாம் சிறந்த குருக்கள் எனவும் சிலர் நிருபித்துள்ளனர். இதே வேளையில் ''சிலருடைய அசமந்தப் போக்கினால் குருத்துவம் களங்கப்பட்டுள்ளது. அது உன்னத நிலையை அடைய இக்குருக்கள் ஆண்டு துணை செய்யும்" என்று வத்திக்கான் அருட்தந்தை லொம்பாடி தெரிவித்தார். அதே போன்று தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றாது, வாழ்கின்ற ஒரு சிலர் இருக்கக் கூடும். இவ்விருபத்தியோராம் நூற்றாண்டின் நவநாகரீக உலகின் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தும், எமது அருட் தந்தையர்கள், தமது உன்னதமான கிறிஸ்தவப் பணியை எம் மக்களுக்கும் நாட்டிற்கும் ஆற்ற வேணும். இப்பேர்ப்பட்ட அர்ப்பண வாழ்விற்கு, மேலும் பல குருக்கள் கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில் தொண்டு செய்வதற்குத், தம் பிள்ளைகளைப் பெற்றோர்கள் அர்ப்பணிக்க வேண்டும் என வேண்டுகின்றோம். எனவே பாதுகாவலன் ஆசிரியர் கொடுத்திருக்கும் இச்செபத்தை இக் குருக்கள் ஆண்டில் செபிப்பது பொருத்தமானதாகும்.

"ஆண்டவரே பரிசுத்த குருக்களை
நீர் தாரும். அருள் வாழ்வில் உம்
குருக்கள் வாழ அருள் கூறும்"

**திருமதி. புவனேஸ்வரி அம்மா இரத்தினராஜா (லண்டன்)**
**(ஓய்வு பெற்ற ஆசிரியை**
**புனித அந்தோனியார் கல்லூரி**
**ஊர்காவற்றுறை.)**

## கருவினிலே தேர்ந்து கொள்ளப்பட்ட குருக்கள்

கருவறையில் உருவாகி
அன்னை மடி தவழ்ந்து
ஆண்டவன் அழைப்பை ஏற்று
அவனியில் அன்புப்பணி புரிய
விரைந்தீர்கள் திருச்சபைக்குள்

பிறர் ஆன்மீகம் வளர்ந்திட
சிறுவர் அறிவு ஒளிர்ந்திட
இளைஞர் எதிர்காலம் ஓங்கிட
தரணியில் வந்தீர்கள் குருக்களே
வாழ்க நீங்கள் என்றும்
வாழ்க உங்கள் பணி எப்பொழுதும்

தன்னலம் அறவே ஒழித்து
பிறர்நலம் காத்திட விரைந்தீர்
செல்வங்கள் முழுதும் துறந்து
உம்மைக் கொடுத்தீர்களே இறைவனுக்கு
வாழ்க நீங்கள் என்றும்
வளர்க உங்கள்பணி எப்பொழுதும்

எம் செபம் உடனிருக்க
இறைவனை வேண்டுவோம் என்றும்
தரணியில் உயர்பணி புரிய
உங்களுக்காய் வேண்டுவோம்
என்றுமே எம் செபத்தில்

**லின்ரா சாந்தினி, சாவகச்சேரிப் பங்கு**

## அருட்பணியாளரே வாழ்க!

அனுதினமும் தொண்டுகள் பல ஆற்றி
அயராது பணியாற்றும் அருட்பணியாளரே!
திருக்கிண்ணத்தை ஏந்திட அழைப்பு பெற்று
திருவருட்சாதனங்கள் வழங்கிவரும் உங்கள்
திருக்கரங்கள் என்றுமே மகத்தானது மாண்புமிக்கதுவே.

இறைவனால் தெரிந்து அழைக்கப் பெற்று
இறையாசீர் எமக்களிக்கும் திருப்பணியாளரே!
இறைதூதராய் பல மறைத்தூதுரைகளை
இருளிலிருந்த எம்மவர்க்கு வாழ்வாக்கிடும்
இனிய உம் நாமம் மகிமை பெறுக

வாழ்வின் தடைகள் எல்லாம் நீங்கிடவும்
வளர்ச்சியில் குருத்துவ பணியது மேலோங்கவும்
வாழ்த்துக்களோடு என்றும் எங்கள் செபம்
உங்களுக்காக பரிந்துரைக்கும்

பா. யாழினி, மானிப்பாய்




"நான் இரவல் கொடுத்தே பாதிப் புஸ்தகங்களைத் தொலைத்து விட்டேன், ஸார்"

"நான் இரவல் வாங்கியே பாதிப் புஸ்தகங்களைச் சேர்த்துட்டேன், ஸார்!"

## 'யேசுவை'க்கண்டோம் – அனுபவித்தோம்

**ஆசிரியர் S. ஸ்ரனிஸ்லோஸ்**



குரு என்னும் சொல்லுக்கு ''புனிதன்" எனப் பொருள் தருகின்றார் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த பேராயர் ஒருவர். தெய்வங்களை உருவாக்கும் தெய்வம் என்பதும் அதன் பொருளாகும் Fr. யேசுநேசன் குருவா? புனிதரா? தெய்வமா? அவர் இயேசுவின் நேசன். குருவாக, புனிதனாக, தெய்வமாக நண்பனாக, நல்வழிகாட்டியாக சகோதரனாக எம்முடன் வாழ்ந்தவர். 1980இல் உப அதிபராக எமது கல்லூரியில் கால்பதித்து 1992 வரை சேவையாற்றினார். Fr. Francis Joseph அதிபராக இருந்த காலத்தில் அவரின் இரு கரங்களாகவும் அவரது இதயமாகவும் செயற்பட்டார். எனக்கூறுதல் மிகையில்லை. இவரது கல்லூரிப் பணி வாழ்வின் பயணப்பாதையில் மூன்று நிலைகளில் இவரை நான் உற்று நோக்குகிறேன்.

### அதிபருடனான...

கல்லூரி நிர்வாகத்தில் அதிபர், ஆசிரியர், மாணவர் என்ற முத்தரப்பாருக்குமிடையில் பாலமாக நின்று அனைத்து உள்ளங்களிலும் தோழமை உணர்வை ஊட்டிய உத்தம குருவாகவே நான் அவரைக்காணுகின்றேன்.

அதிபருக்கும், உபஅதிபராகக் கடமையாற்றிய Fr. Jesu வுக்குமிடையேயான உறவை கணவன் - மனைவி உறவு ஏன்று கூறிப் பெருமைப்பட்டோரும் உண்டு. அந்தளவுக்கு அதிபரின் அன்புக்கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு ஆடம்பரமில்லாத அடக்கமான முறையில் நிர்வாகத்துடன் ஒன்றித்த தனக்குச் சரியெனப்பட்டதை எடுத்துக்கூறி, ஆலோசனைகள் வழங்கி, அதிபருடனான தொடர்பில் ஆரோக்கியமான உறவை வளர்ப்பதில் வெற்றி கண்டவர் Fr. யேசு. இதற்கு இங்கிருக்கும் சிலர் சாட்சியாகவும் இருப்பர். வேலைப்பளுக்களால் அதிபர் ஆடிப்போயிருக்கும் சமயங்களில் ஆறுதல்கூறி, தமது நகைச்சுவையுணர்வினால் புத்துணர்வு ஊட்டி ஊக்கமளிக்கும் உன்னத குணம் அவரிடம் நிறையவே காணப்பட்டது. அதிபருக்கு நல்ல ஆலோசகனாக துயர் போக்கும் அருமருந்தாக, கைகொடுத்துதவும் தெய்வமாக அவர் மிளிர்ந்தார். அதிபருக்காகவே அவர் வாழ்ந்தார். அதிபருக்குள் அவர் வாழ்ந்தார். அதிபரை அதிபதியாக அன்பு செய்து வாழ்ந்தார். வெற்றி கண்டார். இதனால் தோல்வி அவர்முன் துவண்டு போனது.

### ஆசிரியருடனான...

இவரது காலத்தில் இவரோடு பணியாற்றிய ஆசிரியர்கள் இவரை ஒரு குருவாக எண்ணியதற்கும் மேலாக இவரைத்தமது நண்பனாகவும், ஆலோசகனாகவும் எண்ணியே அவரோடு அன்புறவாடினர். குருவாக இருந்தும் புன்னகையால் மற்றோரை மயக்கும் வித்தை Fr. Jesuவுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. எதனையும் பதட்டப்படாமல், நின்று நிதானித்து, ஆசிரியர்களின் மனநிலை அறிந்து தவறுகளை சுட்டிக்காட்டி தேவையான ஆலோசனை வழங்கி தமது நிர்வாகச் செயற்பாடுகளை செவ்வனே ஆற்றினார்.

Fr. Jesu is a man of deep undestanding Kindness and Sympathy ஒவ்வொரு ஆசிரியரையும் வெறுப்பின்றி விருப்புடன் அணுகினார். மனிதன் கடவுளின் சாயல் என்பதில் அவர் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தமையே இதற்கான மூலகாரணமாகும். ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை குறைபாடுகளை அவர்களின் தேவைகளை உடனுக்குடன் அதிபருக்குத் தெரியப்படுத்தி ஆவண செய்வதில் துரிதமாக செயற்பட்ட செயல் வீரனாக அவரைக்காணலாம்.

ஆசிரியர்களின் தனிப்பட்ட வாழ்க்கைப்பிரச்சினைகளிலும் பிரசன்னமாகி அவர்களுக்கு ஆறுதலாகவும் தீர்வாகவும் விளங்கினார். அவர்களின் தனிப்பட்ட சுக துக்கங்களில் ஆத்மபூர்வமாகப் பங்கேற்றார். அதனால் தான் அவரை அறிந்த ஆசிரிய உள்ளங்களில் அவர் இன்னும் உயர்ந்த கோபுரமாக திகழ்கின்றார்.

Fr.Jesu, A man so full of smiles. That took people many many miles.

### மாணவருடனான...

மாணவர்கள், இவர் மணமாகாமல் பெற்றெடுத்த மழலைகள் இவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவற்றில் வளரவும், இறைபற்றுதலும், கடின உழைப்பும் என்ற எமது கல்லூரியின் விருது வாக்குக்கு ஒப்ப மாணவர்களை பயிற்சி விப்பதிலும் முழு முயற்சியுடன் அயராது உழைத்தார். Fr. Jesu. வளர்ந்த மாணவர்களை தவறான விடயங்களில் தண்டிக்கவும் தயங்கமாட்டார். மன்னிக்கவும் மறக்க மாட்டார். தமது கடமை நேரம் முடிந்ததும் மாணவர்கள் மத்தியில் தானும் ஒரு மாணவனாக, குழந்தையாக அவர்களோடு ஒன்றித்து விடுவார். பாலர் வகுப்பு மாணவர்கள் மத்தியில் கொஞ்சிக்குலாவி கதைகள் கேட்டு சிரிக்கவைத்து தானும் ஒரு குழந்தையாக மாறி விடுவார். இதனால் தானோ என்னவோ மாணவர்கள் இவரை செல்லமாக பப்பா என்று அழைத்து இன்புற்றனர். இவரிடம் கற்ற மாணவர்கள் இவரின் நகைச்சுவை உணர்வால் ஈர்க்கப்பட்டனர். பரசூட்கதை, செமினரிக்கதை போன்றவை இன்னும் இவரின் மாணவர்கள் மனதில் நிலைபெற்றுள்ளது.

Patrick's Day தான் இவரது கல்லூரி வாழ்வின் பெருமைக்குரிய காலமாகும் மாணவர்களுடன் இணைந்து ஆடிப்பாடிக் குதூகலிப்பார். Sports meet, Prize Day என்பன இவரது வழிகாட்டலில் வெற்றியாக அமைந்தன. கல்லூரியின் விடுதிக்காப்பாளராக கடமையாற்றிய காலங்களில் மாணவர்களின் உடல் - உள - ஆளுமை வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டவராக செயலாற்றினார். Fr.Jesu மாணவர்களுக்காகவே வாழ்ந்தார். அதனால் மாணவருக்குள் வாழ்கிறார். மாணவரால் வாழ்த்தப்பெறுகின்றார்.

### மொத்தத்தில்

Fr.Jesu வை நகைச்சுவையின் திலகமாக
கடமையின் மனிதனாக
கிறிஸ்துவின் இளைஞனாக
தியாக தீபத்தின் சுடராக
இறைவனின் குருவாகச்
பிரசங்கத்தின் பிதாவாக - நாம்
கண்டோம் - அனுபவித்தோம்.

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு. ஜோசப் செல்வன் பிகிறாடோ செ.தா

**ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களை நன்றாக வாசித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை தியானித்து அதன் பின்னர் இந்த சிந்தனைத்துளிகளை தியானத்தோடு வாசித்தால் நற் பயன் பெறலாம்.**

## பொதுக்காலம் 28 ஆம் வாரம்

**சா.ஞா 7:7-11, எபி 4:12-13, மாற் 10:17-30**

### இன்பம் தரும் ஈகைக் குணம்

"கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள
உலக செல்வங்களை
குப்பையெனக் கருதுகின்றேன்." (பிலி 3:8)

இறைமகன் இயேசுவில் அன்பான சகோதர சகோதரியரே! மீண்டும் ஒரு முறை உங்கள் எல்லோரையும் இந்த ஞாயிறு மறையுரைச் சிந்தனைத் துளிகள் மூலம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி! இறைவார்த்தைக் குள்ளே நாளும், பொழுதும் ஆழமாகிக் கொண்டிருக்கின்ற உங்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

பொதுக்காலத்தின் 28ம் வாரமாகிய இவ் வாரம் எம்மையெல்லாம் இரக்க சிந்தையோடு ஈகைக்குணம் நிரம்பியவர்களாக வாழ அழைப்பு விடுக்கின்றது. உலகின் ஆறு, குளம், கடல் போன்ற நீர் நிலைகளில் உள்ள நீரானது ஆவியாகி அசை மேகங்களாக குவிந்து மீண்டும் மழையாகி ஆறு, குளம், கடல் போன்ற நீர் நிலைகளினை நிரப்புவதுபோல் நாம் எமது அயலவருக்கு செய்கின்ற அன்புச் செயலானது எம்மை நோக்கி இருமடங்காக ஏதோ ஒரு விதத்தில் வந்தடைகின்றது. "இறைவன் மீது கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் எனப்படுகின்றது" இவ்வாறு இறைவனை மதிப்பவர்கள், விண்ணக செல்வத்தினை சேர்த்து வைக்க விரும்புபவர்கள், தங்கள் அயலவரை ஆண் டவரின் சாயலாக கண்டு உதவி செய்ப வர்கள்; இறைவன் கொடுக்கும் அழியாத செல்வத்தையும் ஞானத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

உலக செல்வங்கள் எப்போதுமே நிலை யற்றவை "என் தாயின் கருவில் நின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன் அங்கே திருப்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன்" என (யோபு 1:21) யோபு ஆகமத்தில் குறிப்பிடுவதுபோல நாம் சேர்த்து வைக்கும் பணம், பட்டம், பதவி, பொருள், இடம்,காணி, பூமி எதுவும் நாம் இறக்கும் பொழுது கொண்டு செல்வதில்லை, ஆனால் இந்த உலக பொருட்களைக் கொண்டு எத் தனை பேருக்கு நாம் நன்மை செய்தோம் எத்தனை ஏழைகளின் வாழ்விற்கு ஒளியேற் றினோம் என்பதுதான் மிக முக்கியமானது.

ஒரே கடவுளை முழுமனதுடன் நேசிப்பதும், எம்மை நாமே நேசிப்பதுபோல அயலவரை நேசிப்பதும் தான் கிறிஸ்து கொடுத்த புதிய கட்டளை. இதற்கு இணங்க நேசிப்பதாலும் இருகரம் விரித்து உதவி செய்வதாலும் நான் இவ்வுலக செல்வங்களைக் கொண்டு விண்ணக செல்வத்தினை சம்பாதித்துக் கொள் ளலாம். "அன்புச் செயலால் ஆண்டவன் இயேசுவை வாழ வைத்து,
சோகங்களையும் அரவணைப்பாய்
கண்ணீர்கள் துடைக்கும் விரல்களாய்
கவலைகள் போக்கும் வார்த்தைகளாய்
கரம்பிடித்து வழிகாட்டும் ஏணிப்படிகளாய்
வாழ்வதற்கு முயற்சி செய்வதே தலையாய கிறிஸ்தவ கடமையாகும்.

இறக்கப் போகும் போதும் ஒரு தீக் குச்சானது இன்னொரு தீபத்தை ஏற்றி விட்டு மடிகின்றது சாதாரண தீக்குச்சியே இவ்வாறு செய்யுமானால் உயிருள்ள நாம் எவ்வளவு செய்யலாம்?

எனவே ஆண்டவரை ஆதாயமாக்க இவ்வுலக செல்வங்களையெல்லாம் குப்பை யெனக கருதுகின்றேன்" (பிலி3:8) எனக் கூறும் புனித பவுலடியாரோடு சேர்ந்து நானும் இயேசுவை ஆதாயமாக்க தயாரா? என ஒரு முறை கேட்டுப் பார்க்க வேண்டும்.

இயற்கையில் இருந்து சுவாசிக்கும் காற்று
கடலில் இருந்து மீன் - சூரியனுடைய
ஒளியில் இருந்து புத்துணர்ச்சி, வாழ்வு
அரிசி, காய்வகைகள், பழங்கள்
இரத்தினம், தங்கம், இரும்பு, உலோ கங்கள் என அளவில்லாமல் பெற்றுக் கொள் கின்ற நாங்கள், கொடுக்க தயங்குவது ஏன்?? என்னைப் போன்று எல்லாவற்றையும் கொடுக் கக் கற்றுக்கொள்ளுங்கள் என்பதுபோல சிலு வையில் இருகரம் விரித்து தமது இறுதி இரத் தம், தண்ணீர் கொடுத்த இயேசுவைப்போல நாமும் கொடுக்கக் கற்றுக்கொள்வோம்.
"தர்மம் தலைகாக்கும்"

## பொதுக்காலம் 29 ஆம் வாரம்

**எசா 53:10-11, எபி 4:14-16, மாற்கு 10:35-45**

### கதிரை காலியாகுமா? யாருக்கு அந்த ஆசனம்?

"மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரியவும் பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரையே அளிக்கவும் வந்தார்." (மாற் 10: 44-45)

**முதல் இறைவார்த்தைப் பொழிவு :**

எசாயா திருநூலில் இருந்து எடுக்கப் படும் இவ்வாசகமானது இயேசு ஆண்டவரை துன்புறும் ஊழியனாக எடுத்துக்காட்டுகின் றது. கிறிஸ்து இயேசுவை பின்பற்றி கிறிஸ் தவன், கிறிஸ்தவளாக, குருக்கள், துறவியராக, மறைப்பணியாற்றும் பொது நிலையினராக அழைக்கப் பெற்று பணியாற்ற புறப்பட்ட அனைவரும் துன்பங்களை எதிர் நோக்க வேண்டும் என்றும் அத் துன்பங்களின் வழி யாகத் தான் மீட்பு கிடைக்கும் என்று இப் பொழிவு விளக்குகிறது.

**இரண்டாம் இறைவார்த்தைப் பொழிவு :**

முதல் இறைவார்த்தைப் பொழிவின் தொடர்ச்சியாக வரும் இவ் இரண்டாம் பொழி வானது, எல்லாத் துன்பங்களும் ஒரு நன்மை யிலேயே முடியும் எனவும், உண்மையான தலைமைத்துவம் என்பது துன்பங்களை வெற்றியின் படிக்கட்டுக்களாக மாற்றி, தனது துன்பத்தினை புறந்தள்ளி, அயலவரின் துன்பம் துடைக்க கரங்களை நீட்டுவதிலேயே தங்கியுள்ளது என்றும் கூறி நிற்கின்றது. தன்னை வெறுமையாக்கி தலைக்கணத்தை துறந்து, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டவர்க ளுக்கு தொண்டனாகவும், அவர்களுக்கு துன்பம் ஆபத்து வரும் வேளையில் தனது உயிரையும் கொடுக்க தயங்காதவனாகவும் இருப்பவரிடமே உண்மையான தலைமைத் துவத்தினை காணமுடியும்.

**நற்செய்திப் பொழிவு :**

"நான் உங்கள் பாதங்களைக் கழு வியதுபோல் நீங்களும் ஒருவர் மற்றவருடைய பாதங்களைக் கழுவவேண்டும் என்கிறார் இயேசு.
விதை மண்ணில் மடிந்தால்தான் மரம்,
மலர் காம்பை இழந்தால்தான் காய்,
கதிர் வயலைத் துறந்தால்தான் நெல்மணி,
நெல்மணி உமியை துறந்தால்தான் அரிசி,
அரிசி நீரில் இறந்தால்தான் சோறு.


இதனைப்போல கர்வம், இறுமாப்பு, பதவி வெறி, பணத்தாசை, நான் என்ற எண்ணம் என்பவற்றை யார், யார் துறந்து விட தயாராக இருக்கின்றார்களோ, அவர்கள் தலைவராக தகுதியுள்ளவராவார். இன்னும் இயேசு ஆண்டவர் கூறுவதுபோல் பணிவிடை பெறவிரும்புபவன் பணிவிடை புரியட்டும் தலை வனாக விரும்புபவன் தொண்டனாகட்டும்.

**கதிரை காலியாகுமா? யாருக்கு அந்த ஆசனம்?**

உலகின் எல்லாப் பாகங்களிலும் இருக் கும் அதிகார வெறிதான், உலகு அழிவை நோக்கி போய்க்கொண்டிருப்பதற்கு காரண மாகும். ஆசை, குறிப்பாக ஆசன/ பதவி ஆசை மனிதனை எத்தனையோ தில்லு முல்லுகளை யெல்லாம் செய்ய வைக்கின்றது. சாதாரண கடைநிலை ஊழியனாக ஒரு நிறுவனத்தில் வேலை செய்பவன் நான் முகாமையாளராக ஆக முடியவில்லையே என கவலைப்படுவது தொண்டனாக இருப்பவன், கிராம அதிகாரியா கவும், கிராம அதிகாரியானவன் மாவட்ட அதிகாரியாகவும், மாவட்ட அதிகாரியானவன் மந்திரியாகவும், பிரதமராகவும், ஜனாதிபதி யாகவும் ஆசைப்பட்டு கதிரைக்கு போட்டி போடுவதும், கதிரை எப்போது காலியாகும் என என்னவெல்லாமோ மெல்ல முயற்சி செய்யும் இக்கால மனிதருக்கு இயேசு கொடுக்கும் இன்றைய பாடம் மிக முக்கிய மானதாகும். குறுக்கு வழியில் கிடைக்கும் பதவி எப்படி வந்ததோ அப்படியே காணாமல் போய் விடும். ஆனால் சரியான தலைவ னுக்கு சரியான பதவியையும் அவன் பதவி யில் செய்யும் நன்மைத்தனங்கள் கொண்டு அவனுக்கு சம்பாவனை கொடுத்து தன்னோடு வைத்திருப்பதும் இறைச்சித்தமென்றும் இயேசு விளக்கமளிக்கின்றார். கடவுள் கொடுப்பதை சரியானவருக்கு சரியான நேரத்தில் கொடுப் பார். பேராசை கொள்ளாமல் காத்திருப்பதே நல்லது.

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"

---



**யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்களின் உடல், உள, ஆன்மீக நலன்கள் கவனிக்கப்படவேண்டியது கட்டாயமானதாகும். யாழ் கத்தோலிக்கத் திருச்சபையானது பல வருடங்கள் ஒரு அருள்பணியாளனை வைத்தியசாலை ஆன்ம குருவாக நியமித்து அவருடாக நோயாளிகளின் நலன்களை கவனித்து வருகின்றது. தற்போது வைத்தியசாலை ஆன்ம குருவாகப் பணிபுரியும் அருட்பணி. செபமாலை பெரேரா அ.ம.தி அடிகளை அண்மையில் சந்தித்து உரையாடினோம். அவரோடு நடை பெற்ற நேர்காணலை பாதுகாவலன் வாசகர்களுக்காக அப்படியே தருகின்றோம்.**

**1. கேள்வி :** "வைத்தியசாலை ஆன்மகுரு" என்ற பதவிக்கும் தங்கள் பணிக்கும் உள்ள தொடர்பை கூறுவீர்களா?

**பதில் :** வைத்தியசாலை ஆன்ம குருவுக்கான பணியை எனது குருத்துவ அழைத்தலுக்குள் ஓர் உன்னதமான அழைத்தலாகக் கருதுகின்றேன். முழுமையாக வைத்தியசாலையின் அனைத்து விடுதிகளுக்குள்ளும் எனது அதிக நேரத்தை செலவிடுகின்றேன். நோயால் பாதிக்கப்பட்டு உடல் உளரீதியாக வேதனையை அனுபவிக்கின்ற நோயாளிகளைத் தரிசித்து அவர்களோடு அன்பாக உறவாடி இறைமகன் யேசுவின் அன்பையும், பராமரிப்பையும் இன, மொழி, மத வேறுபாடின்றி அனைவருக்கும் கொடுப்பதே இப்பதவிக்கான உன்னதமான பணியாக அமைகின்றது.

**2. கேள்வி :** எவ்வாறான பணிகளுக்கு வைத்தியசாலைக்குள் முன்னுரிமை கொடுக்கின்றீர்கள்?

**பதில் :** நோயாளரைத் தரிசித்து அவர்களின் உடல், உள வேதனையை பகிர்ந்து கொள் ளுதல், நோயும் பிணியும் வாழ்வில் ஓர் அங்கம் என்பதைத் தெளிவுபடுத்தி இறைமகன் யேசுவின் குணமாக்கல் வல்லமைக்காகச் செபித்தல், இயன்றளவு பொருளாதார தேவை களைப் பூர்த்தி செய்தல், கத்தோலிக்க நோயாளராக இருந்தால் ஒப்புரவு, அருட்சாதனம், தேவநற்கருணை என்பவற்றை வழங்குதல், இறக்கும் நோயாளராக இருந்தால் அவர்க ளுக்கு நோயில்பூசுதல் எனும் அருட்சாதனம் வழங்கி நல் மரணமடைய வழிவகுத்தல்.

**3. கேள்வி :** கத்தோலிக்க நோயாளர்களை எவ்வாறு இனங்காண்கிறீர்கள்?

**பதில் :** நோயாளர்களுக்கு உதவிபுரிவதற்காக அவர்களோடு துணையாக நிற்பவர்கள் ஊடாகவும், அங்கே பணிபுரியும் கத்தோலிக்க மருத்துவர்கள், தாதிகள் மூலமாகவும், தாதிய பயிற்சி பெறும் மாணவர்கள், மாணவிகள் மூலமாகவும் இன்னும் நோயாளர்களின் பார்வை ஊடாகவும் அவர்கள் எம்மை ஏற்றுக் கொள்கின்ற முறைகள் ஊடாகவும் இனம் காணமுடிகிறது. அத்தோடு சிலர் தாமாகவே வந்து தாம் கத்தோலிக்கர் என்பதை அறிமுகப்படுத்தி தங்களின் ஆன்மீகத்தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றார்கள்.

**(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...)**

---

## வாசகர் கடிதங்கள்

அன்புடன் ஆசிரியருக்கு,

வணக்கம்

27.09.2009 அன்று வெளியிடப்பட்ட பாதுகாவலன் பத்திரிகை படித்தேன். யாழ் மறைமாவட்டத்தின் ஒரே ஒரு கத்தோலிக்க ஏடாக இப்பத்திரிகை மிளிர்வது பெருமைக்கு உரிய விடயம், ஆக்கங்கள் பொதுவாக தரம் வாய்ந்தவையாக உள்ளமை மகிழ்ச்சி. குருக்கள் ஆண்டு சிறப்பு பகுதியில் வெளியான குருக்களா? அருள் பணியாளர்களா? என்ற அருள்பணி. இரவிச்சந்திரன் அடிகளாரின் கட்டுரை ஒரு தெளிவை ஏற்படுத்தியிருக்கிறது. அருள்பணியாளர் றெஜிஸ் இராஜநாயகம் அடிகளார் எழுதிய நம் கடவுள் நம்மை தண்டிக்கும் கடவுளா, என்ற கட்டுரையை படிக்க ஓர் மன ஆறுதல் என்னில் ஏற்பட்டது. வளனார் பப்பா பகுதி நகைச்சுவை யோடு கூடிய பயனுள்ள விடயங்கள் அலசப்பட்டுள்ளது சிறப்பு. அதை நான் விரும்பி படிப்பேன்.

மேலும் உங்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

**யேசுதாசன், மட்டுவில்**

---

அருட்பணியாளர் ம. பாவிலுப்பிள்ளை அ.ம.தி அடிகளின் மறைவை ஒட்டி "தனித்தன்மையாய் வாழ்ந்து மறைந்த தந்தை" என்ற தலைப்பில் அருட்சகோ. யே. ஜெரால்ட் அ.ம.தி அவர்கள் எழுதிய செய்தியை பாதுகாவலன் 13.09.2009 இதழில் படித்தேன்.

பாவிலுப்பிள்ளை அடிகள் ஒரு தனித்துவமானவர்தான். நான் கேள்விப்பட்ட ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தையாக அவர் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் ஞாயிறு திருப்பலிப் பூசையின் மத்தியில் தேவநற்கருணை வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தை அடுத்தாரில் வைத்துவிட்டு அடுத்தாரில் இருந்து இறங்கி விறுவிறு என்று கோவிலுக்கு வெளியே சென்றார். திருப்பலிப் பூசைக்கு வந்திருந்த எல்லோரும் அவர் எங்கு செல்கிறார். என்ன செய்யப் போகிறார் என்று யோசித்தனர். சிலர் எழுந்து அவர் பின்னால் சென்றனர். அவர் நேரே கிணற்றடிக்குச் சென்று கிணறிலிருந்து தண்ணீர் எடுத்து இன்னொரு வாளியில் ஊற்றி அதை எடுத்துக் கொண்டு போய் அங்கு புதிதாக நாட்டப்பட்டிருந்த மரக்கன்றுக்கு ஊற்றத் தொடங்கினார். சனங்களில் சிலர் தாங்களும் நீரை எடுத்து அங்கு புதிதாக நடப்பட்டிருந்த கன்றுகளுக்கு வார்க்கத் தொடங்கினர்.


கன்றுகள் எல்லாவற்றுக்கும் தண்ணீர் ஊற்றி முடிந்த பின் பாவிலுப்பிள்ளை அடிகள் கோவிலுக்குள் சென்று தேவநற்கருணையை மக்களுக்கு வழங்கத் தொடங்கி திருப்பலியை நிறைவேற்றினார்.

பாவிலுப்பிள்ளை அடிகள் அங்கு பங்குத் தந்தையாகச் சென்றதும் அங்கு பல மரக்கன்றுகளை நாட்டுவித்திருந்தார். ஆனால் அவர் எவ்வளவு சொல்லியும் அச் செடிகள் தண்ணீர் ஊற்றப்படாமல் வாடிக் கொண்டிருந்தன. அதனால்தான் அவர் அன்று அப்படிச் செய்திருந்தார். அதன்பின்பு சனங்கள் தாமாகவே செடிகளுக்கு ஒழுங்காகத் தண்ணீர் ஊற்றத் தொடங்கினர். மரங்களும் வளர்ந்து நல்ல பலன் அளித்து வந்தன.

**அருட்பணி. பாவிலுப்பிள்ளை அடிகளின் ஆன்மா இறைவனுடன் இணைவதாக.**

**அ. அருள், கொழும்பு - 13**

# பாஷையூர் பங்கில் முன்னேற்றகரமாக சென்று கொண்டிருக்கும் மறைக்கல்விப் பணி



''என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி உங்களைப் பற்றி இல்லாதவை, பொல்லாதவையெல்லாம் சொல்லும் போது நீங்கள் பேறு பெற்றவர்களே மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள். ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்கு கிடைக்கும் கைமாறு மிகுதியாகும்.

துன்பங்களின் மத்தியிலே இறையரசை போதிக்க வேண்டும். அதுவே இறைமறைக்கல்விப் பணி. முன்னிருந்த இறைவாக்கினரும் அவ்வாறே.

**- மறைக்கல்வீ தினமன்று மறையாசிரியர் சங்கம் -**

''உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்' என்ற கிறிஸ்துவின் கூற்றுக்கிணங்க உலக மறைபரப்பு தினத்தை முன்னிட்டு கடந்த மாதம். 27ம் திகதி மறைக்கல்வி தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய நாளில் மறைக்கல்வி நடு நிலைய இயக்குனர் அருட்தந்தை அன்ரன் ஜோர்ச் அவர்களின் தலைமையில் சிறப்புத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்க மறையாசிரியர்களும், மறைக்கல்வி மாணவர்களும் திருப்பலியை சிறப்பித்தனர். அத்தோடு அவர்களின் பணியின் ஆழம் செயற்பாடு என்பன எடுத்துக் கூறப்பட்டு தமது வாக்குறுதியையும் இறைவன் சார்பாக குருவானவர் முன்னிலையில் சமர்ப்பித்தனர்.

தொடர்ந்து திருப்பலியை நிறைவேற்றிய அருட்தந்தை ''பாஷையூர் பங்கை பொறுத்த மட்டில் மாணவர்கள் கல்வியில் ஆர்வமுள்ளவர்களாய் இருப்பதோடு மறைக்கல்விப் பணி மிகவும் வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது என்றும் கூறி மறையாசிரியர்களையும், மாணவர்களையும், ஊக்கப்படுத்தினார்.

மேலும் மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு பல போட்டிகள் இடம் பெற்றன. குறிப்பாக 20ம் திகதி விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன. அன்று புனித சவேரியார் குருமட அருட்சகோதரர்கள் நடு நிலையாளராக போட்டிகளை சிறப்பாக நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களை தெரிவு செய்தனர். அவர்களுக்கான பரிசில்களை உலக மறைபரப்பு தினத்தில் அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் வழங்கி சிறப்பித்தனர். அவ்வேளையில் எமது பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்கள் மறையாசிரியர்களின் முயற்சியையும், மாணவர்களின் ஊக்கத்தையும் பாராட்டியதோடு எமது முன்னாள் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை. மில்பர் வாஸ் அவர்களும் அனைத்து செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கினார். அவ்வேளை பங்குத்தந்தை அருட்சகோதரர்களுக்கு நன்றியையும் தெரிவித்ததோடு, பரிசில்கள் பெறாத ஏனையவர்களை அடுத்த தடவை பெற உற்சாக மூட்டி நல்ல வழி காட்டியாக நல்ல தந்தையாக, நல்ல ஆசானாக விளங்கினார்.

மேலும் எமது பங்குத்தந்தை அவர்களின் வழிநடத்தலில் அனைத்து விடயங்களும் ஒழுங்கு செய்யப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**''ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்'' எபி 12:6**

**போ. இந்துமதி.**

# புனித பவுஸ்தீனா விழா 05.10.2009

''ஆண்டவரின் திருக்காட்சியின் போது, அவர் திருவாய் மலர்ந்தருளிய வாக்குகளை மக்களுக்கு எடுத்துரைப்பதில், புனித பவுஸ்தீனா தன் வாழ்நாளை அர்ப்பணிப்புடன் செலவிட்டார்'' இவ்வாறு 05.10.09 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு, புனித லூசியாஸ் பேராலயத்தில் இடம் பெற்ற பெருவிழாவின் போது, வட கொழும்பு இறை பக்திக்குழுக்களின் ஆன்மீக இயக்குனர் அருட்திரு. சுபராஜ் அடிகள் குறிப்பிட்டார்.

இப் பெருவிழாவிற்கு வட கொழும்பின் அனைத்து இறை இரக்கப் பக்திக் குழுக்களும் பங்குபற்றினர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ் விழாவில் பங்குபற்றியமை சிறப்பாகும்.

முதலில் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, ஆராதனை வழிபாடுகள் நடாத்தப்பட்டு, நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டது. இதன்.பின்னர் அருட்தந்தை சுபராஜ் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். திருப்பலியின் போது இடம் பெற்ற உரையின் போது, அவர் மேலும் குறிப்பிட்டது யாதெனில் ''விழா நாயகி புனித பவுஸ்தீனாவின் வாழ்க்கை நமக்கு முன்னோடியாக, எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும். இயேசுவின் நற்செய்திகளை எப்படிப் படிப்பறிவில்லாத அப்போஸ்தலர்கள் மக்களுக்கு எடுத்துச் சென்றார்களோ, அப்படியே. படிப்பறிவற்ற புனித பவுஸ்தீனாவும் இறை இயேசுவில் கொண்ட இறைப்பற்றின் காரணமாக அவர் அருளிய விஷேட காட்சிகளின் போது கூறியவற்றைத் தன் நாட் குறிப்பில் எழுதி வைத்து, அவற்றை மக்களுக்கு எடுத்து சென்றார். வாழ்க்கையில் வறுமை, கன்னியர் மடத்தில் சொல்லொன்னாத் துன்பங்கள் பலவற்றிற்கு அஞ்சாது முகம் கொடுத்து, துஞ்சாது தன் பணியினை தொடர்ந்தார். இறை இரக்கப்பக்தியின் மூலமாக மக்களுக்கு மன்னிப்பின் மகத்துவத்தை உணர்த்தி 33ம் வயதில் இறைபதம் அடைந்தார்'' எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவின் சிறப்புக்கு காரணகர்த்தாவாக விளங்கியவர், வட கொழும்பு இறை இரக்கப் பக்திக் குழுக்களின் தலைவர் திரு. சிவ பிரகாசம் மரியதாஸ் அவர்களாகும். இவரது ஏற்பாடுகள் யாவும் பாராட்டுக்குரியன.

**- மோ. தார்சீசியஸ் -**

# தொல்லை தரும் தொலைபேசியை நிறுத்துவோமா?



விஞ்ஞானத்தின் ஒரு உன்னதமான கண்டுபிடிப்பு ''செல்லிடத் தொலைபேசி'' என்று சொன்னால் அது மிகையாகாது. மனிதனின் நன்மைத் தனத்திற்கு பயன்பட வேண்டிய இக்கண்டுபிடிப்பானது இன்று தீமைகள் பலவற்றுக்கு அடித்தளமாக அமைகிறது. பல்வேறு வசதிகளைக் கொண்ட செல்லிடத் தொலைபேசியை இன்றைய இளம் சமூகம் தேவையற்ற விதத்தில் பாவிப்பதன் மூலம் சமூகத்திற்கு பெரும் தீமை ஏற்படுத்துவதை நாம் காணுகின்றோம்.

இன்று செல்லிடத் தொலைபேசிப் பாவனை ஆலயத்துக்குள்ளும் ஆலய வளாகத்துக்குள்ளும் அதிகரித்து காணப்படுகிறது. வழிபாட்டு வேளைகளிலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் போதும் செல்லிடத் தொலை பேசியின் ஆரவாரச் சிணுங்கல்களை கேட்கக் கூடியதாக இருக்கிறன்றது.

அண்மையில் யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. இ.ம.வி. இரவிச்சந்திரன் அடிகள் தலைமையில் இடம்பெற்ற யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க பொது நிலையினர் கழக அங்குரார்பணக் கூட்டத்தில் ''வழிபாட்டு வேளையில் செல்லிடத் தொலைபேசிப்பாவனை அதிகரிப்பு'' எனும் விடயம் மிகக காத்திரமாக. ஆராயப்பட்டு தடுக்கும் செயற்பாடு பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. பொது நிலையினர் கழகத்தின் முதற் செயற்பாடாக இதற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகளை மேற் கொள்வது என்ற தீர்மானத்துக் கமைய, யாழ் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலும் ஆலயங்களிலும் வழிபாட்டு வேளையில் செலலிடத் தொலைபேசிப் பாவனையை தடை செய்யக் கோரும் சிறிய சுவரொட்டிகள் தயாரிக்கப் பட்டு வழங்கப்பட்டுள்ளள.

1. தொல்லைகள் நீக்கி தொழுவோம் இறைவனை.
2. ஆலயத்தில் தொலைபேசி பாவனையை தவிர்ப்போம்
3. என் இல்லம் இறைவேண்டலின் வீடு. எனும்மூன்று சுவரொட்டிகள் தமிழிலும்
4. Switch off the phones and switch on to god

எனும் சுவரொட்டி ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டு மொத்தமாக நான்கு சுவரொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்செயற்பாடு அனைத்து குருக்களாலும், பங்குத்தந்தையர்களாலும் பல பொது நிலையினராலும் வரவேற்கப்பட்டு பாராட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

என்வே வழிபாட்டிற்கென ஆலயத்திற்கு வரும் நாம் ஒவ்வொருவரும் முழுமையாக இறைவனைத் தொழவும், மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கவும் செல்லிடத் தொலைபேசியை ஆலயத்துக்கு வரும் போது உடன் எடுத்துவருவதை தவிர்ப்போம். அல்லது அதனை நிறுத்தி வைப்போம். இந் நடவடிக்கை மூலம் நாமும் இறையருளைப் பெறுவதோடு மற்றவர்களும் இறை அருளைப்பெற ஒத்துழைப்பு வழங்குவோம். பொது நிலையினர் கழகத்தின் இவ் உன்னதமான செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

**இ.அ. அமலரட்ணம்.**

# புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழா 05.10.2009

புனித பிரான்சிஸ் அசிசியாரின், திருதின ஆராதனைகள், திருவிழா 05.10.2009ல் யாழ்/ மரியன்னை பேராலயத்தில், நடைபெற்றது. இதனை சபையின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. செல்வராசா அடிகளார் தலைமையில், இறைபற்றுதலுடன் கொண்டாடப்பட்டது. திருவிழாத் திருப்பலியை இவ்வருடம் வெள்ளி யூபிலியை கொண்டாடிய, அருட்பணி நேசராசா அடிகளார் ஒப்புக் கொடுத்து, மறையுரையாற்றுகையில், புனித அசிசியாரின் வாழ்க்கை ஏழ்மை, தாழ்மை, பொறுமை, வறுமை, தரித்திரம் போன்ற பண்புகளை தமது வாழ்வாக்கி, வாழ்ந்த ஒரு புனிதர் என்றும், இல்லற வாழ்விற்குள் புகுந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சபை அங்கத்தவர்கள். தவஉடையை அணிந்திருப்பதை பார்க்கும் பொழுது, மனம் கூசுகின்றது என்றும் இப்படிப்பட்ட காட்சியில் தாம் றோமாபுரியை நினைவு கூர்வதாகவும், கூறியதுடன், தவ உடையை அணிந்ததுடன் மட்டும் நின்று விடாமல், அனுதினமும் எமது அழைத்தலுக்கு பிரமாணிக்கமாக வாழ்ந்து, சபையை வளர்க்க வேண்டும் என்றும் கூறினார். திருநாளுக்கு முன்பாக திருதின ஆராதனைகள் நடை பெற்றன, இவ்வாராதனைகளை அருட்பணி. S.J. இராசநாயகம் அடிகளார், அருட்பணி மில்பர் வாஸ் அடிகளார், அருட்பணி. பிரான்சிஸ் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றி ஒவ்வொருவரையும் ஆன்மீகத்தில் நெறிப்படுத்தினர். விழாவுக்கு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் பக்திச்சபை அங்கத்தவர், பொது நிலையினர் என மொத்தம் 250 உறுப்பினர் சமூகம் கொடுத்திருந்தது, குறிப்பிடத்தக்கது. திருவிழா மிகச்சிறப்புற, நடைபெற சபைத்தலைவர் நீக்லஸ் (பப்பா) அவர்கள் பெரும் முயற்சிகளை எடுத்தமை பாராட்டுதலுக்குரியது.

**S. செயமலர்**
**சபையின் வழிபாட்டுக்குழு தலைவி**

# ..........தேடினேன்..........
# ......தேடிக்கொண்டேயிருக்கிறேன்......

.தேடினேன் தேடினேன்
தேடிக்கொண்டேயிருக்கிறேன்

தற்காலிக முகாம்களிலா?
தடுப்புக் காவல்களிலா?
தறப்பாள் கொட்டில்களிலா?
தண்ணீர் தொட்டியடிகளிலா?
தாண்டிக்குளம் தொடங்கி
தந்திரிமலைவரையும் தேடினேன்

பஸ் தொடரில் தேடினேன்
பாசத்தோடு தேடினேன்
வயோதிபருள் தேடினேன்
வாலிபருள் தேடினேன்
நோயாளியாய் தேடினேன் – மன
நோயாளியுள் தேடினேன்
பகலிரவு பாராமல்

சந்தையிலே தேடினேன்
சந்திகளில் தேடினேன்
சமயலகம் தேடினேன்
சலியாது தேடினேன்
அலுவலக வாசல்களில்
அலுப்பின்றி வாடினேன்
புதினத்தாள் அனைத்திலுமே
புண்ணியமாய் தேடினேன்

கதிர்காமர் தொடங்கி மதவாச்சி ஈறாக
கச்சேரி தொடங்கி கறிக்கடை ஈறாக
கடைத்தெரு தொடங்கி கல்லறைகள் ஈறாக
கண்டவர் நிண்டவர் எல்லாரிலும் தேடினேன்

ஐஸ்கிறிம் கடையிலா
ஐ சி ஆர் சி வானிலா
அனாதை இல்லத்திலா
அங்கவீனர் வரிகளிலா

ஓமந்தை முதல் உளுக்குளம் வரையாக
நெழுக்குளம் முதல் நேரியகுளம் வரையாக
புதுக்குளம் முதல் புளியங்குளம் ஈறாக
சமணங்குளம் முதல் சமயபுரம் ஈறாக
குளம் குளமாயத் தேடினேன்
குந்திக் குளறித் தேடினேன்

இறுதியில்.....
Zone 04ல் தேடினேன்
Zone 06ல் தேடினேன்
சோர்வின்றிச் சோம்பலின்றி
சோகத்தோடு தேடினேன்

நான் கண்டதோ....
தாயிழந்த பாலகரின் பால் முகங்கள்
வாயிழந்த பாவிகளின் மௌன மொழிகள்
கண்ணீரே தண்ணீரின் குடி கலன்கள்
கரை காணா கதை கொண்ட கருமுகங்கள்
(இவற்றைத்தான் கண்டேன்)

அப்போ....
என் உறவுகள் எங்கே?....
அணைத்து வந்த பாசங்கள் எங்கே?....
வலயன் மடத்திலா?... முள்ளி
வாய்க்காலிலா....?
பதுங்கு குழியிலா....?
பார்த்த நந்திக் கடலிலா...?
படுத்திருந்த பாயிலா?....
பனைமரத்தடியிலா...?

தேடினேன் தேடினேன்
தேம்பித் தேம்பித் தேடினேன்
தேடுவேன் தேடுவேன்
இனிமேலும் தேடுவேன்

**– அருட்பணி. பா.பி. இராசசிங்கம் –**

# வரடும் பயிர்கள் துளிர்க்கட்டும்

இன்ப நுகர்ச்சியில் ஒரு நிமிடம்
இனிய வாழ்வுக்காய் பல நிமிடம்

வேதனைத் தீயினில் வெதும்பி
வன்னி மண்ணில் வறண்டது
போதாதென்று
அகதி முகாம்களிலும்
அவலக்குரல்கள் கேட்குது

சிரித்து மகிழ்ந்த உறவுகள்
சிறகிழந்த பறவைகளாய்
அடைத்து வைத்திருக்கும்
அநியாயக் காட்சிகள்
அரங்கேறுது அகதிமுகாம்களில்
உறவுகளுக்காய் ஏங்கிய வேளை
உயிரோடு வந்துவிட்டார்கள்

என்றொரு செய்தி
எதிரொலித்த வேளைதனில்
எதிர்பாராமல் ஒரு மூச்சு
முகாம்களின் நிலை கேட்டு
முழு மூச்சும் நிற்குது இப்போ
வதை முகாமாகும் நிலைகண்டு
வறண்டு போகுது நாக்கு

இந்நிலை மாறட்டும்
இனிய கீதங்கள் கேட்கட்டும்
உதய தீபங்களாய்
உறவுகள் ஒன்றிணையட்டும்

**சு. கிறிஸ்ரீன் யூடிற்றா**
**தரம் - 13**
**இளவாலை கன்னியர் மடம்.**

## யாழ் போதனா வைத்தியசாலை...

**4. கேள்வி :** தங்களுடைய பணிக்கு வேறுயாராவது உதவிக்கரம் நீட்டுகின்றார்களா?

**பதில் :** தனியொரு மனிதனாக வைத்தியசாலைக்குள் முழுமையாகப் பணியாற்றுவது மிகவும் கடினம். இதனால் பலர் எனக்கு உதவி செய்கிறார்கள். தூய டி மசனெட் இறையியல் குழுமத்தில் இருந்து வருகை தரும் அருட் சகோதரர்களும், திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரி ஒருவரும் எனக்கு பக்கபலமாக இருக்கி றார்கள். இவர்களின் உடனிருப்பு எனது பணிகளை இலகுவாக்குகிறது.

**5. கேள்வி :** மருத்துவ மனைக்குள் இருக்கும் அனைத்து நோயாளர் பிரிவுகளையும் தங்களால் கவனிக்க முடிகிறதா?

**பதில் :** யாழ் போதனா வைதத்தியாலை 30க்கு ஆமற்பட்ட நோ.பிரிவுகளை கொண்டுள்ளமையால் தனியொருவனாக ஒரு நாளிலோ அல்லது ஒரே நேரத்திலோ தரிசிக்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள் அதனால் என்னடன் பணியாற்றம் ஏனையவர்களிடம் பணிகளைப் பகிர்ந்து கொண்டு அவர்களிடம இருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் எனது தரிசிப்புக்களை மேற்கொள்கின்றேன்.

**6. கேள்வி :** தங்களின் இப்பணிகளுக்குத் தேவையான நிதியினை எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்?

**பதில் :** நான் ஏற்கனவே கூறியது போல சிலருடைய பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்ய நிதி கட்டாயமாகத் தேவைப்படுகிறது. இத்தேவையை நிவர்த்தி செய்ய நான் சார்ந்து நிற்கும் அமலமரித்தியாகிகளின் சபையும், கியூடெக் நிறுவனமும் ஒரு தொகை நிதியைத் தந்து உதவுகின்றார்கள். அத்தோடு புனித வின்சென்ற் டி டீபால் சபையினரும் அவ்வப்போது உதவிக்கரம் நீட்டுகின்றார்கள். இன்னும் தாராள மனம் படைத்த தனி நபரிடம் இருந்தும் உதவி கிடைக்கின்றது. இவற்றைக் கொண்டு ஓரளவு தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

**7. கேள்வி :** வைத்தியசாலை பணிவாழ்வில் தங்களை பாதித்த சம்பவத்தைக் கூறுவீர்களா?

**பதில் :** நோயாளர்களைத் தரிசிக்கும் போது சிலர் எம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இது மிகவும் வேதனையாக இருக்கும். சிலரை அணுகி உரையாட முற்படும்போது பதில் கூறமாட்டார்கள். மதம் மாற்றும் நடவடிக்கை என நினைத்து எம்மை வெறுப்போடு பார்ப்பார்கள். சிலர் எடுத்தெறிந்து கதைப்பார்கள்.

**8. கேள்வி :** கத்தோலிக்க மக்கள் வைத்திய சாலைக்குள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

**பதில் :** கத்தோலிக்க மக்கள் திருப்பலியில் பங்கு பற்றுவதோடு மட்டும் நின்று விடாமல் அதற்கு அப்பாற் சென்று கிறீஸ்தவ மதிப்பீடுகள் நிறைந்த அன்புச் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும் என்று திருச்சபை விரும்புகிறது. அதற்கு சிறந்த ஒரு களமாக வைத்தியசாலை அமைகின்றது. வாரத்தின் ஒரு முறையாவது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கும் நோயாளர்களை தரிசித்து விஷேடவிதமாக கைவிடப்பட்டவர்களோடு உறவாடுவது ஒரு கிறீஸ்தவ மதிப்பீடாகும். தனியாகவும், குழுவாகவும் பக்திச்சபையாகவும் இதை மேற்கொள்ளலாம் இவ்வாறு தரிசிப்புக்களை மேற்கொள்பவர்கள் ஆன்மீகத் தேவையுடைய கத்தோலிக்க நோயாளர்களை இனம் கண்டு என்னோடு தொடர்பு கொள்கின்ற போது அத் தேவை உடனடியாக பூர்த்தி செய்யப்படும். இவ்வாறு இப்பணிகளை மேற்கொள்ளும் போது நான் ‘‘ஆடையின்றி இருந்தேன் நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள் நான் நோயுற்றிருந்தேன் நீங்கள் எனைக் கவனித்துக் கொண்டீர்கள்” (மத்தேயு 25: 36) என்ற இறைவார்த்தைக்கு அர்த்தம் கொடுத்தவர்களாக மாறுவோம்.

**நேர்காணல்**

**இ.அ.அமலரட்ணம், யாழ்.பேராலயம்**

## கிறிஸ்துவை வாழ்வால்... (2ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அனுப்பியவரின் திட்டத்தை நிறைவேற்றுவதும் அதை செயல்படுத்துவதுமே அனுப்பப்பட்ட பணியாளரின் பணி என்பதனை ஒவ்வொருவரும் உணர்ந்து அனுப்பியவரின் திட்டத்தை அறிய செபத்தின் வழியாக இறைவனுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

நற்செய்திப் பணியாளர் தூய ஆவியானவரின் கருவி. ஆவியானவருடைய வெளிப்படுத்தல்களை கண்டு கொள்வதும் அதற்கு கீழ்படிவதும் அவரது முக்கிய கடமையாக உள்ளது. பணிசெய்யும் மக்களின் மனங்களையும், சூழ்நிலைகளையும் அறிந்து, அதனை மதித்து செயற்படுத்தலே அவர் அவர்களுக்கு எடுத்துரைக்கும் நற்செய்திக்கு சான்றாகும். மனிதரை மாற்றுவதற்கு முன் இறைமகன் மனிதராக மாறினார். மனித இயல்புக்குள் நுளைந்தார். மனிதரை சரியாகப் புரிந்து கொண்டார். மனிதர் தன்னை குறை கூறாத நிலையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். இதனை ஒவ்வொரு மறைபரப்பாளரும் தன் வாழ்வில் பாடமாகக் கொள்ள வேண்டும். விடுதலை அளிக்கும் உண்மைக்கு சான்று பகர்ந்து உடல், மனம், உணர்வுகளைக் கட்டுப்படுத்தி தனிசெபத்தின் வழியாக இறைவனோடு தன்னை இணைத்துக் கொண்டு அவரது ஆளுமையை உலகிற்கு பிரதிபலிக்க வேண்டும்..


“நான் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க முடியாது” என்று கூறிய பேதுருவை போன்று இயேசுவையும் அவரது நற்செய்தியையும் எடுத்துரைக்கும் உதிப்பாட்டோடு நாமும் வாழ முயல்வோம்.

## உலகத் திருச்சபை நாளேடுகளில் இருந்து....

### கொடைக்கானல் பல்கலைக்கழகத்தில் அன்னை தெரசாவின் முழு உருவச் சிலை திறப்பு

கொடைக்கானல் பல்கலைக்கழகத்தில் அன்னை தெரசாவின் முழு உருவச் சிலையை 15 அக்டோபர் அன்று முதல்வர் கருணாநிதி திறந்து வைக்கிறார் என துணைவேந்தர் அருணா சுவகாமி கூறினார். கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டையொட்டி 15 அக்டோபர் அன்று சிறப்பு பட்டமளிப்பு விழா நடக்கிறது. அப்போது பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்படும் அன்னை தெரசாவின் முழுஉருவ சிலையை முதல்வர் திறந்து வைக்கிறார். இதற்காக ரூ. 4.5 லட்சம் மதிப்பில் பாண்டிச்சேரி சிற்பக்கூடத்தில் அன்னை தெரசா சிலை தயாகி வருகிறது. பல்கலைக்கழகத்தில் 7 அடி பீடத்தில் இச்சிலை அமைக்கப்பட உள்ளது என்று அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அருணா சுவாமி கூறினார்.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 26-06-1935
விண்ணில் : 21-10-2006

### அமரர் ஞா. சிறில்

நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா
நீர் இவர் பரிசாய் இருந்தருளும்

குடும்பத்தின் சுடர் ஒளியாய் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே,
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஆறாது எம் மனம்,
உங்களோடு வாழ்ந்த நாட்களின் இனிய நினைவுகள்,
எம் உள்ளத்தில் காலம் எல்லாம் வாழ்ந்திடும்,
என்றும் உங்கள் அன்பை எம் நெஞ்சம் வாழ்த்தும்
மோட்சக் கரையில் நாம் சந்திப்போம் என்று ஆறுதல் அடைகின்றோம்.

Advt-68/09

466/2, புனித யுவானியார்
கோயில் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி



நம்முடன் 08.04.1968
இறைவனுடன் 30.09.1998

### செல்வி மெர்லீன் மைதிலி தூர்சீசியஸ்

(புனித மரியன்னை பாடசாலை (OLR)
புனித பத்திரிசியார் கல்லூரி
முன்னாள் ஆசிரியை

“சீவியத்தில் என்னை நேசித்தோரே மரணத்தின் பின்னும்
என்னை மறவாது எனக்காக செபியுங்கள்”

முப்பது ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்து
பதினொரு ஆண்டுகள் எமை விட்டு மறைந்தாலும்,
என்றும் உன் நினைவுகள் எமைவிட்டு நீங்காது மகளே,
அன்பனாம் அமலனின் பாத நிழலில் என்றும் வாழ்ந்திடுவாய்.

கல்கிசை புனித அந்தோனியார் ஆலயத்திலும், யாழ். புனித மரியன்னை ஆலயத்திலும், யாழ். அருள் ஆச்சிரமத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கல்கிசை,
39, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-69/09

பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள்,
அண்ணிமார்கள், மருமக்கள்.


## உள்ளூர் இடம் பெயர்ந்தோர்களுக்கான விசேட நிதி சேகரிப்பு

### 19.08.2008 தொடக்கம் 16.07.2009 வரை

| | |
|---|---|
| **ஆயரிடமிருந்து 1** | 660, 694.00 |
| **ஆயரிடமிருந்து 2** | 420, 000.00 |

**பங்குகளிலிருந்து:**

| | |
|---|---|
| யாழ் பேராலயம் | 211,000.00 |
| பாஷையூர் | 207,325.00 |
| நாவாந்துறை - அஞ்சனந்தாழ்வு | 195,000.00 |
| உரும்பிராய் | 160,480.00 |
| சுண்டிக்குளி | 150,432.00 |
| மானிப்பாய் | 140,800.00 |
| பருத்தித்துறை | 136,000.00 |
| ஆனைக்கோட்டை - நவாலி | 127,640.00 |
| சில்லாலை | 117,200.00 |
| மாதகல் | 80,910.00 |
| இளவாலை | 76,985.00 |
| குளமங்கால் | 68,970.00 |
| கொய்யாத்தோட்டம் | 60,000.00 |
| பண்டத்தரிப்பு | 56,410.00 |
| பாண்டியந்தாழ்வு | 52,450.00 |
| சக்கோட்டை | 50,000.00 |
| குருநகர் | 40,150.00 |
| எழுவைதீவு | 34,600.00 |
| அச்சுவேலி | 30,000.00 |
| நல்லூர் | 26,805.00 |
| மாரீசன்கூடல் | 25,830.00 |
| கரம்பொன் | 23,000.00 |
| விளான் | 17,500.00 |
| O.L.R. யாழ்ப்பாணம் | 15,800.00 |
| மண்டைதீவு | 15,150.00 |
| சாவகச்சேரி | 15,000.00 |
| கரவெட்டி | 5,000.00 |
| புங்குடுதீவு | 4,000.00 |

**தனிப்பட்டவர்களிடமிருந்து:**

| | |
|---|---|
| திரு இருதய ஆலயம், அமெரிக்கா (அருட்பணி. S.A. ஜோர்ச்) | 200,000.00 |
| தமிழ் கத்தோலிக்க மக்கள் (ஜேர்மன்) (குருமுதல்வர்) | 119,070.00 |
| அருட்பணி. S. பிலிப்பு அ.ம.தி. | 100,000.00 |
| சகோ. லலித் (தியான இல்லம்) கொழும்பு | 100,000.00 |
| தேசிய சேமிப்பு வங்கி யாழ் மாவட்டம் | 81,050.00 |
| தியான இல்லம் யாழ்ப்பாண்ம | 78,900.00 |
| Dr. ஈஸ்வரி, மானிப்பாய் | 51,000.00 |
| திரு. B. சுரேஷ், தும்பளை | 50,000.00 |
| இறை இரக்கம் கொழும்பு (திரு. மரியதாஸ்) | 50,000.00 |
| திருமதி. இருதயநாதன், நவாலி | 50,000.00 |
| புனித. டொன் பொஸ்கோ பாடசாலை (அருட்சகோதரி. ஜீவந்தி) | 30,000.00 |
| திரு. M. அரியரதாசன், வட்டுக்கோட்டை | 22,000.00 |
| Dr. அல்போன்ஸ் (அருட்பணி. S.J. இராயநாயகம்) | 20,000.00 |
| திரு. N. சுந்தரராஜ், வட்டுக்கோட்டை | 10,000.00 |
| திரு. N. மரியாம்பிள்ளை | 10,000.00 |
| திரு. N. நற்கருணைராஜ், நோர்வே | 10,000.00 |
| புனித. திரேசாள் பாடசாலை, அச்சுவேலி | 8,415.00 |
| அருட்பணி. A.P. தேவசகாயம் | 8,000.00 |
| கிளரேசியன் சகோதரர்கள் | 6,500.00 |
| புனித சூசையப்பர் ஆச்சிரமம் (அருட்பணி. R.J.E. ஜெயசீலன்) | 6,000.00 |
| அருட்பணி. S.VB. மங்களராஜ் | 2,000.00 |
| திரு. M. மரியநாயகம் நவாலி | 1,312.00 |
| திருப்பாலத்துவசபை, சுண்டிக்குளி | 250.00 |
| **மொத்த வரவு** | **4239,628.00** |

**செலவினம்:**

| | |
|---|---|
| உணவு, மற்றும் பொருட்கள்/ ஒலிபெருக்கி சாதனம் 1ம் முறை | 660,694.00 |
| அருட்பணி. பெனற் அடிகளார் ஊடாக வன்னி உள்ளூர் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் | 2150,000.00 |
| ஆண்கள், பெண்களுக்கான ஆடைகள் | 299,935.00 |
| உணவு, மற்றும் பொருட்கள் 2ம் முறை | 90,500.00 |
| பாடசாலை உபகரணங்கள் 1ம் முறை | 96,912.00 |
| செபப் புத்தகங்கள், செபமாலை, வேதாகமம் | 98,970.00 |
| சமையல் பாத்திரங்கள் | 58,480.00 |
| பாடசாலை உபகரணங்கள் 2ம் முறை | 44,850.00 |
| விளையாட்டுப் பொருட்கள் | 18,650.00 |
| நோயாளிகளுக்கான செலவு 1ம் முறை | 48,750.00 |
| 2 இந்து கோவிலுக்கான சமயப் பொருட்கள் | 38,325.00 |
| மருந்துவகைகள் | 13,475.00 |
| 2 பனசோனிக் றேடியோ பொதுப் பாவனை | 6,600.00 |
| 2 ஒலிபெருக்கி சாதனங்கள் | 71,400.00 |
| 2 திருப்பலிபீடம் | 8,000.00 |
| வறிய மக்களுக்கு பணமாக 1ம் முறை | 368,000.00 |
| 3 சேலை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு | 3,760.00 |
| வறிய மக்களுக்கு பணமாக 2ம் முறை | 33,000.00 |
| நோயாளிகளுக்கான செலவு 2ம் முறை | 25,500.00 |
| இனிப்புப் பண்டங்கள் | 4,070.00 |
| நிழற்படங்கள் | 4,212.00 |
| வங்கிக் கழிவு (அருட்பணி. றோசான்) | 1,000.00 |
| வறிய மக்களுக்கு பணமாக 3ம் முறை | 4,700.00 |
| அருட்சகோதரிகள் மூலம் வன்னி முகாம்களுக்கு | 20,000.00 |
| நோயாளிகளுக்கான செலவு 3ம் முறை | 5,000.00 |
| அருட்சகோதரிகள் மூலமாக முகாம் மக்களுக்கு | 3,500.00 |
| வவுனியா முகாமுக்கு பணமாக | 5,000.00 |
| **மொத்தச் செலவு** | **4183,283.00** |
| **மிகுதி கையிருப்பு** | **56,345.00** |
| | **4239,628.00** |

**அருட்பணி. J.B. அன்ரனிதாஸ்**
**நிதிமுகாமையாளர்**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



## தூய திரேசாள் ஆலய... (1ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பிகளின் நன்கொடையினாலும் அழகுற நிர்மாணிக்கப்பட்ட புதிய பங்கு மனை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் 04.10.2009 அன்று ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. இப்பணிக்குதமது நிதி ஒதுக்கீட்டிலிருந்து, கணிசமான உதவியளித்த யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இப்பங்கு மைந்தனுமாகிய திரு. சொலமன் சிறில் அவர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றமை சிறப்பம்சமாகும். பல வகையிலும் பங்குமக்களின் தாராள ஒத்துழைப்பு இப்பணி பூர்த்தியடைவதற்கு பெரிதும் துணை நின்றது. தூய திரேசாள் ஆலய சுற்றாடலுக்கு வலுவூட்டும் புதிய பங்குமனையின் புலர்வு இம்மக்களின் நம்பிக்கை வாழ்வை மென் மேலும் வலுவூட்டி வளர்க்கும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

## பணியாளர்களின் தன்னலமற்ற... (1ம் பக்கத்தொடர்ச்சி)

கியது. இவ்வேளையில் இலங்கை யின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் முத்திப்பேறுபெற்ற யோசவ வாஸ் அடிகள் மாறுவேடம் பூண்டு வந்து பணியாற்றினார். இரவு வேளை களில் மக்களை சந்தித்து வழிபாடுகளை நடத்தி மக்களை விசுவாசத் தில் உறுதிப்படுத்தி கத்தோலிக்க மறைக்கு புத்துயிர் ஊட்டினார். அவரின் பணி நிறைவின் முந்நூறு ஆண்டுகள் நினைவுகூருகின்ற போது எமது மறைபரப்பு பணிக்கு இது உந்து சக்தியாக உள்ளது.

எனவே மீண்டும் ஒருமுறை நற்செய்தி அறிவிப்பு தினத்தை கொண்டாடுகின்றவேளை இயேசுவின் இறுதிக்கட்டளையாகிய ''உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய் தியைபறைசாற்றுங்கள் (மாற் 16,15) என்ற இறைவார்த்தைய எமது உள்ளங்களில் இருத்துவோம். நாமும் எமது அன்றாடப்பணிகளில் நற்செய்தி மதிப்பீடுகளை எமது வாழ்வில் கடைப்பிடித்து உலகிற்கு ஒளியாக திகழ்வோம். எமது செபத் தினாலும் தியாகம் நிறைந்த வாழ் வாலும் நற்செய்திப்பணிக்கு எமது பங்களிப்பை செலுத்துவோம். அனைத்தையும் இறை மகிமைக் காய் செய்து இறையாட்சியை எம் மண்ணில் நிலை நாட்டுவோம்.

## ஆளுநர் விருது பெறும்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறே நாடக அரங்கக் கல்லூரியின் புகழ்பெற்ற நாடகங்களான 'புதியதொரு வீடு', பொறுத்தது போதும், 'உறவுகள்', 'கூடி விளையாடு பாப்பா', 'கோடை', 'தியாகத்திருமணம்', 'சங்காரம்', 'வெறியாட்டு', போன்ற நாடகங்களில், தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், மௌனகுரு, கவிஞர் முருகையன் போன்ற பிரபல்ய நெறியாளர்களின் கீழ் நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றவர்.

அதுமட்டுமின்றி சிறைக்காவலதிகாரியாக கமையாற்றிய இவர் சிறையில் இருந்த கைதிகளைப் பயன்படுத்தியே 'சங்கிலியன்', 'சீர்திருத்திய கைதி' போன்ற நாடகங்களை நெறியாக்கம் செய்து முறையே வெலிக்கடை, யாழ். சிறைச்சாலை, யாழ். வீரசிங்கம் மண்டபம், குருநகர், அரியாலை போன்றவற்றில் மேடையேற்றி கைதிகள் மத்தியில் நல்லெண்ணத்தினை வளர்த்தவர். தான் சார்ந்த சமூகத்திலும் பல நாடகங்களை தயாரித்து மேடையேற்றியவர். திருமறை கலாமன்றம் மேற்கொண்ட ஐரோப்பிய நாடுகளுக்கான கலைப்பயணங்களிலும் இணைந்து சென்று ஐரோப்பிய நாடுகளிலும் அதிக வரவேற்பை பெற்றுள்ளார். அதுமட்டுமின்றி பிரபல சிங்கள கலைஞரான தர்மசேன பதிராஜாவின் 'In Search of a Road' என்னும் ஆவணத் திரைப்படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தும், அசோகா ஹந்தகமவின் 'Take this Road' (இவ்வழியால் வாருங்கள்) தொலைக் காட்சித் தொடரிலும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஐம்பது வருடங்களுக்கும் மேலாக நாடகத்துறையோடு அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதுடன் நடிப்பு, நெறியாள்கை, வேட உடைவிதானிப்பு, ஆவணம் பேணுகை, களப்பயிற்சி வழங்குதல் என அரங்கோடு தொடர்புடைய பல்துறைகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வருகின்ற G.P பேர்மினஸ், திருமறைக்கலாமன்ற நிர்வாக செயற்பாடுகளிலும் பல்வேறு சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி பலரும் பல்வேறு விருதுகளை வளங்கியுள்ளனர். 'அரங்க வாரிதி', 'யாழ் ரத்தினா', 'கலைஞான சேகரி', 'கலைஞான பூரணன்', போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளதுடன் கலாசார திணைக்களத்தினால் 2004இல் ''கலாபூசண'' விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தற்போது வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலைஞர்களுக்கான உயர் விருதான 'ஆளுநர்' விருதினை இவ்வருடம் பெறுகின்றார். இவரை பாதுகாவலனும் மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றது.

## ஆண்டவன் என்ன சாதி?

ஓ! அந்த சாதி என்னும் வியாதி - அது
நம்மோடு ஒன்றிவிட்ட நீண்ட நாள் வியாதி
மருத்துவரின் பரிந்துரைக்கு மாறாத வியாதி - ஆனால்
மனம் மட்டும் மாறினால் மாறும் அந்த வியாதி

புனித தெய்வம் அது வகுக்கவில்லை சாதி
மனிதனின் அகம்பாவம் வகுத்ததுதான் சாதி
படைப்பினில் பிரிவுகள் இது என்ன நீதி?
கிடைக்குமோ தீர்வு இரு சமூகங்கள் மோதி?

படித்தவர் பாமரர் செல்வந்தர் ஏழை
குருக்கள் கன்னியர் அனைவரையும் தாக்கி
பகுத்தறிவு பண்பாடு இல்லாமலாக்கி
பாவச் செயல் செய்த் தூண்டும் இந்த வியாதி

ஒட்டுகின்ற உள்ளங்களை வெட்டுகின்ற பெற்றோர்
மனமுடைந்து தற்கொலையை நாடுகின்ற பிள்ளை
தட்டுகின்ற மனக்கதவின் தாழ் திறக்குமென்றால்
மட்டும் இந்தத் தீண்டாமை மடிந்து விடுமன்றோ!

ஆலயங்களைக்கூட அவர்க்கு இவர்க்கென்று
ஆளுக்கொரு கோயில் கட்டிக் கும்பிடும் மனிதா!
ஆண்டவன் என்ன சாதி? அறிந்து சொல்வாயோ? - உன்
வேண்டுதல் பலி இதெல்லாம் வீண் உணர்வாயோ?

நவாலியூர் நாயகி

## "நம்பிக்கை வாழ்வை மலர வைக்க அர்ப்பணத்தோடு உழையுங்கள்"

### "கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தில் அருட்பணி. வின்சன்ற் பற்றிக் அடிகள்."

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் நிர்வாக சபைக் கூட்டம் அதன் தலைவர் துரைஆரோக்கியதாசன் தலைமையில் 23.09.2009 அன்று கூடியது. அதன் ஆரம்ப நிர்வாக உறுப்பினரான அருட்பணி. வின்சன்ற் பற்றிக் அடிகள் சிறப்புரையாற்றுகையில் ''மனிதத்தை மலர வைக்கும் பண்புகளை விதைப்பதில் ஒவ்வொருவரும் அக்கறையோடு செயற்பட வேண்டிய காலமிது. பல சவால்களுக்கு முகம் கொடுத்து மனித விடுதலைக்காக பல்வேறு தளங்களில் நின்று எமது வாழ்வுக்காக தம்மையே பலியாக்கிய கிறிஸ்துவின் சாட்சிய வாழ்வு எமது வாழ்வுக்கு திருப்புமுனையாகவேண்டும்.

மனிதம் சிதைக்கப்பட காரணமாகி வரும் போலிக் சலாச்சார மாயைக்குள் சிக்கித் தவித்தோரை நல்ல மனிதர்களாக்க, நம்பிக்கை வாழ்வை மலர வைக்க, கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வாக்கி வாழ வழிகாட்டியாக கத்தோலிக்கராகிய ஒவ்வொருவரும் மறுகிறிஸ்துக்களாக மாறவேண்டியது இன்று காலத்தின் தேவையாகும்.

25வது ஆண்டினை காணவிளையும் கத்தோலிக் கலை இலக்கிய வட்டத்தின் முயற்சிகள் பாராட்டத்தக்கவை. அதன் பணிகளோ பல்வேறு தளங்களில் நின்று, சமூக, சமய கலை இலக்கிய பதிவுகளால் வெள்ளிவிழா ஆண்டினை காண முயலும் வேளை ஆன்மீகத் தேடலுடன் மனிதத்தை மதிக்கும் புனித பணிகளால் மக்கள் மனங்களை பண்படுத்த கிறிஸ்தவ விழுமியங்களை கலை இலக்கிய ஊடகங்கள் மூலம் இன்னும் அதிகமாக அர்ப்பணத்தோடு செயற்படுத்துவதே சிறப்பாகும்.'' எனப் பாராட்டினார்.

நிறைவில் இக்கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகராக இருந்து மறைந்த அருட்பணி. ஜெபநேசன் அடிகளார், கவிஞர் யாழ் ஜெயம் (விக்டர் மாஸ்ரர்) ஆகியோருடன் மண்ணை விட்டு மறைந்த, மறக்கப்பட்ட குருக்கள், கன்னியர், பொதுமக்களின் ஆன்மாக்களுக்காக அஞ்சலித்ததோடு எதிர்கால திட்டமிடல்கள் முன்மொழியப்பட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**தகவல் : செ. ஜோசவ்பாலா, செயலர்.**

## துன்பப்படுபவர்கள்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

**1. எல்லா மக்களும் மீட்படைய அழைக்கப்பட்டுள்ளனர்.**

உண்மை என்னவென்றால் மனித இனத்தின அடிப்படையான அழைப்பு இறைவனிடம் மீண்டும் செல்ல வேண்டும். அதாவது மீண்டும் ஆரம்பமான இடத்திற்கே செல்ல வேண்டும். காரணம் கிறிஸ்து மூலமாகத்தான் அனைத் தும் புதுப்பிக்கப்பட்டு முழுமை அடைந்தது. கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தத்தின் மூலமாக பிரிந்து போனவர்கள், பல்வேறுவகை யானவர்கள், முரண்பாடுகள், பகைமையோடு வாழ்ந்தவர்கள், சாந்தம் அடைந்து மீண்டும் ஒப்புரவாகி ஒன்றிணைந்தனர். இந்த புதிய ஆரம்பம் கிறிஸ்துவின் மேன்மையான உயிர்ப்பின் மூலமாக ஏற்பட்டது. அவர்தான் முடிவில்லாத பேரின்ப வாழ்வை நாம் அடையவும், புதுப்பிறப்பாக நாம் மாறவும் அனைத்தையும் தன்மேல் சுமந்துக்கொண்டார். முரண்பாடுகள், வேதனைகள் மத்தியிலும் புதிய வாழ்வுக்கான எதிர்பார்ப்பும், எதிர்கால புதிய படைப்பும் இப்போதே இவ்வுலகிலே பிரகாசித்து சுடர்விடத் தொடங்கிவிட்டது. திருச்சபையின் மறைபரப்பு பணியானது நம்பிக்கையோடு எல்லா மக்களும் வாழ வழிசமைக்க வேண்டும். இதற்காகத்தான் இயேசு தன்னு டைய சீடர்களை அழைத்து புனிதப்படுத்தி கடவுளுடைய அரசைப்பறைசாற்ற அனுப்பினார். இதனால் எல்லா மக்களும் இறைவனின் மக்களாக மாறினர். இந்தப் பணி ஒன்றின மூலம் தான் உண்மையான மனித குலத்தின் பயணம் தெளிவுபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. உலக மறை பரப்புப் பணியானது திருச்சபையின் அடிப்படையான, தொடர்ச்சி யான வாழ்வாக மாற வேண்டும். திருதூதர் தூய பவுலைப் போன்று எமது அடிப்படையான கடமை நற்செய்தி அறிவிப்பதே ஆகும்.

**2. புனித பயணம் செய்யும் திருச்சபை**

குறிக்கப்பட்ட எல்லைகளற்ற உலக திருச்சபையானது இவ்வுலகளில் வாழும் அனைத்து மக்களின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் பொறுப்பானது. (நற்செய்தி அறிவிப்பு - 53) நம்பிக்கை என்ற வித்தினை தனது அழைப்பின் மூலம் பெற்று கிறிஸ்துவின் பணியை இவ்வுலகிலே தொடர்ந்து ஆற்றுவது திருச்சபையின் மாபெரும் கடமையாகும். திருச்சபையின் பணியினை நாம் ஒரு பொருளாகக் கொண்டு அளவிடமுடியாது..

(அடுத்த இதழில் தொடரும்...)

## சிந்தனைத் தூறல்கள் - 03

அப்துல் ரகுமானின் **இது சிறகுகளின் நேரம்**

### நடமாடும் 'மம்மி'கள்

ஒருவர் மரணப்படுக்கையில் இருந்தார். அவருக்கு வயது 80. மருத்துவர் 'இன்னும் ஓரிரு மணி நேரத்தில் உயிர் பிரிந்து விடும்' என்று கூறிவிட்டார்.

அவர் நெருக்கமான உறவினரை அருகில் அழைத்தார்.

''நான் இறந்த பின் என் கல்லறையில் இப்படி எழுதிவை'' என்று சொல்லிவிட்டு இறந்து விட்டார். அவர் கூறிய கூறிய வாசகம் :

இவர் இன்ன ஆண்டு பிறந்தார். 30வது வயதில் இறந்தார்; 80 வது வயதில் புதைக்கப்பட்டார்.

இது அவருக்கு மட்டும்ல்ல; பலருக்குப் பொருந்தும். மனிதரில் பலர் 30 வயதிற்கு மேல் வாழ்வதில்லை. அப்படியென்றால் 30 வயதில் அவர்கள் இறந்து போகிறார்கள் என்று அர்த்தமில்லை.

வாழ்தல் என்றால் ஒரு நோக்கத்திற்காக, ஒரு குறிக்கோளுக்காக இடைவிடாமல் உயிர்த்துப்புடன் இயங்குதல்.

சராசரி மனிதர்களுக்கு வாழ்க்கையில் இரண்டு குறிக்கோள் தான். வேலை தேடுதல் திருமணம் செய்து கொள்ளுதல்.

இந்த இரண்டும் நிறைவேறும் வரை அவர்கள் உயிர் துடிப்புடன் இயங்குகிறார்கள். இந்த இரண்டும் நிறைவேறி விட்டால் அவர்கள தேங்கி நின்று விடுகிறார்கள்

இந்த இரண்டும் நிறைவேறியவர்கள் வாழ்க்கையில் ஒருவழியாக செட்டில் ஆகிவிட்டேன் என்கிறார்கள். அதாவது அவர்கள் இனி உயிர்த்துடிப்புடன் இயங்குவதற்கு குறிக்கோள் ஏதுமில்லை என்பது பொருள் வேலையும் கிடைத்து திருமணமும் ஆகி விட்டால் பெரும்பாலாருடைய வாழ்க்கையில் உப்பு சப்பு அற்று போய்விடுகிறது.

அத்தகையோர் தான்! எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டார் ''ஏதோ இருக்கிறோம்'' என்பார்கள்.

வெறுமனே இருத்தல் வாழ்க்கை அல்ல. கல்லும் இருக்கிறது, மண்ணும் இருக்கிறது. அவை வாழ்வதாக அர்த்தமா?

ஓடிக்கொண்டிருந்தால் தான் நதி. ஓரிடத்தில் தேங்கி நின்றுவிட்டால் அது நதியல்ல, குட்டை.

குட்டையில் தேங்கிய நீர் அழுகும், நாறும், நோய் பரவும்.

வாழ்க்கையில் தேங்கிப் போனவனும் அழுகுவான், நாறுவான், நோய் பரப்புவான்.

ஓடிக்கொண்டே இருக்கும் நதிதான் தூய்மையாய் இருக்கும். அதுதான் ஊருக்கு உதவும். ஓடுவதுதான் வாழ்க்கை. ஓடாமல் தேங்கி போவது தான் மரணம்.

குட்டை என்பது உண்மையில் நதியின் மரணமே.

(மறுபடியும் தூறும்)

## சிறுவர் தினம் ஒக்டோபர் 01

### குழந்தைத் தொழிலாளி

பென்சிலின் கூர்மையுள்
கனவு மறந்து
எச்சில் இலையின்
ஏழ்மையை
வலிந்து மணந்த பின்....
சின்னதாய் சிரிப்பையும்
மைதானப் பொழுதுகளையும்
பாத்திரங்களோடு சேர்த்து
கழுவி விட்ட பின்...
சில்லறைத் திருட்டின்
விம்பமும்
இனிப் பெரிதாய் போனபின்...
பிரடியில் அடிவாங்கவும்
பிறரின் 'ரிப்ஸ்' க்காய்
காத்திருக்கவும் பழகியபின்
ஊட்டி விட்டு தான் மறையும்
புதிய அன்னையாய் மாறியபின்
பளிங்கு மேசையின்
ஐந்தாம் காலாய்
ஒட்டிய வயிற்றுடன்
ஒட்டி நின்றபின்
பள்ளி சாலை மணிகேட்கும்
பருவம்
வாழையின்
பாதி இலை விரிக்கிறது
இந்த வாழைக்கு விரித்த
கண்ணியை விலக்குவது யாரோ?

எஸ்.ஏ. அருட்செல்வன்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.